# தேனாகத் தோன்றியது தேனாகிவிட்டது!

திராவிடநாடு

மலர் 9 | 3-9-50 | இதழ் 10

இலங்கை 25 சதம்] விலை அணா மூன்று


## நாட்டு நல் வாழ்வு நமது இலட்சியம்

## ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை

## கொள்கையை வேலாக்கி குதிப்போம் அறப்போரில்

### நெல்லை மாநாட்டில் கருணாநிதி

மாநாட்டுப் பந்தலின் முகப்பு



"என் போன்றவர்களுக்கு இந்தச் சிறப்பு வழங்கப்படுவதன் நோக்கம், இயக்கம் இளைஞர்களின் சொத்து, உழைப்பாளிகள் அமைத்த மாளிகை. அதில் உல்லாச புரியினர் வாழ முடியாது என்பதை நாட்டுக்கும், நாட்டிலே நம்மைப் பற்றி நச்சுக் கருத்துக்களை நடமாட விடுபவர்களுக்கும் எடுத்துக்காட்டத்தான் என்றே நான் கருதுகிறேன்" என்று நெல்லை மாவட்ட மாநாட்டிற்குத் தலைமை வகித்த தோழர் மு. கருணாநிதி வெளியிட்டார். மேற்படி மாநாடு கோவில்பட்டி வேல்வெள்ளைச்சாமி பந்தலில் 26, 27 தேதிகளில் பெருமிதத்தோடு நடைபெற்றது. மேலும் தொடர்ந்து தலைமை தாங்கிய தோழர் கருணாநிதி, ஆர்வத்தோடு ஆற்றிய சொற்பொழிவின் பகுதியாவது:—

தென் இந்திய நல உரிமைச் சங்கமாக—ஜஸ்டிஸ் கட்சியாக—திராவிடர் கழகமாக—திராவிட முன்னேற்றக் கழகமாக நாம் வளர்ந்திருக்கிறோம். ஒவ்வொரு மாறுதலின் போதும் ஒவ்வொரு புதுமை ஏற்பட்டு வந்திருக்கிறது. சுயமரியாதைக் கொள்கைகளைத் தேயவிடாமல் சுயநலத்திற்காக இயக்கத்தைப்பயன்படுத்திக்கொள்ளாமல்தொண்டு புரிந்த சுத்த வீரர்கள் தான் இன்று அணிவகுத்து நிற்கிறோம். ஆனால் இன்றைய மாறுதல் — அதாவது சென்ற ஆண்டு நமது இயக்கத்தில் ஏற்பட்ட மாறுதல் நாமாகத் தேடிக்கொண்டதல்ல. நமக்குத் தலைவராயிருந்த பெரியார் கட்டாயப்படுத்தித் திணித்தது.

செப்டம்பர் 17 !... நாம் மறக்க முடியாத நாள். பெரியார் பிறந்த நாளும்—நாம் அவரை விட்டுப் பிரிந்த நாளும் அதுதான்! சிந்திய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மீண்டும் செயலில் இறங்கப் புறப்பட்ட நாள் அது. கண்ணீர் சிந்திக்கொண்டே பிறந்தோம், கண்ணீரிலேயே உதயமானோம் கண்ணீருடனேயே வளர்ந்து வருகிறோம்!

நம் வளர்ச்சியின் வேகம்—நம் உழைப்பின் எதிரொலி — நம்மிடையே ஆனந்தக் கண்ணீரை உண்டுபண்ணும் அமோக வெற்றியாக அமையவேண்டும்!

நாடு நம்மைத்தான் எதிர்பார்த்து நம்பிக் கிடக்கிறது. நாம் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையையும் காதைத் தீட்டிக்கொண்டு நாடு கவனிக்கிறது. இந்திய உபகண்டத்திலேயே நாம் பெரிய கட்சிகளில் ஒன்றாகிவிட்டோம். வேறு எந்தக் கட்சிக்கும் இளைத்தவரல்ல நாம் —காங்கிரஸ் கட்சிக்கு இருக்கும் மதிப்பைவிட, சோஷியலிஸ்டுகளைப்பற்றிய அபிப்பிராயத்தைவிட; இந்து மகா சபைக்குக் காட்டப்படும் ஆதரவைவிட, கம்யூனிஸ்டுகளிடம் காட்டப்படும் அக்கரையைவிட, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அதிகமாகவே வரவேற்பு இருக்கிறது தென்னாட்டில்! இன்னும் சொல்லவேண்டுமானால் தென்னாட்டிலேயே சிறந்த பேச்சு வீரர்களையும்—சிந்தனையை அள்ளி வீசமீபுத்துலகச் சிற்பிகளையும் கடமை ஆர்வத்துடன் கொண்டு ஓயாது பாடுபடும் கழகம் நமது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்று மட்டுந்தான். நாம் வளர்ந்திருக்கிறோம். வளர்ந்துகொண்டே போகிறோம்.

நாம் நீதி, நேர்மைக்காகப் போராடுபவர்கள். கஷ்டங்களைப்புன்சிரிப்போடு ஏற்று, பொதுப்பணி புரிந்து வருபவர்கள். நமது கொள்கைகள் நாட்டின் நலிவைத் தீர்ப்பவை, நல் வாழ்வு தருபவை.

கல்லடியும் சொல்லடியும் பட்ட காலத்திலே கறையாதது நமது இயக்கம்—பணக்காரர்களின் செல்வாக்கென்ற ஈட்டிகள் எறியப்பட்ட நேரத்திலே இறந்து போகாத இயக்கம் — மடாதிபதிகளின் எதிர்ப்பு, மகந்துகள் ஜீயர்களின் கொதிப்பு இவைகளால் மாண்டு போகாத இயக்கம்—பதவியும் பட்டமுமே தேவை யென்பவர்களின் பாசக் கயிற்றிலிருந்து விடுபட்ட இயக்கம்—சொந்த வாழ்வும் சுயநலமுமே பெரிதென்போரின் 'பேய்'ப் பிடியிலிருந்து தப்பிய இயக்கம்—கொள்கைக்காக வாழ்ந்த நாகை மணியை, பாபவரம் நடராசனை, ஆரூர் வி. எஸ். இராமனை, அழகிரிசாமியை அணைத்திருந்த இயக்கம்—மொழிக்காக உயிர்விட்ட தாளமுத்து நடராசன்களைக் கொண்டிருந்த இயக்கம்—கொள்கைக்காக மரத்திலே பிணமாக ஊஞ்சலாட்டப்பட்ட உடையார்பாளையம் வேலாயுதங்களை உற்பத்தி செய்யும் இயக்கம்—மதுரை மாநாட்டுத் தீயைக் கண்டு மனங் கலங்காத இயக்கம்—குடந்தைத் தெருவினிலே குருதி வெள்ளத்தைக் கண்டு குலை நடுங்காத இயக்கம்—இராம காவியம் இழுக்குடையது என்பதை எடுத்துக் காட்டி பாரதியார்களை சேதுப் பிள்ளைகளை சொற்போரிலே வெற்றிகண்ட இயக்கம்—'ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவு தான் ஆனது ஆகட்டும்' என்று பாடிவரும் ஆயிரமாயிரம் தம்பிகளைப் பெற்றுள்ள இயக்கம்—தம்பிகளின் நெஞ்சைத் தட்டிப் பார்த்து "உறுதியானது தானு இது!" என்று உணர்ந்து அறப்போருக்கு உரிய காலம் பார்த்திருக்கும் உலக அறிஞர்களில் ஒருவராம் அண்ணாதுரையைப் பெற்றிருக்கும் இயக்கம்—குள்ளநரிக் கூட்டத்தின் [illegible] புதுவைக் கவிஞர் பாரதிதாசனைப் பெற்றுள்ள இயக்கம்—ஆரியம் ஒரு மாயை, அது பல உருவில் நடமாடும் என்பது கண்டு இலக்கியத் துறையிலே—நாடகத் துறையிலே—கலைத் துறைகளிலே—ஆரியத்தின் கைவரிசையை எதிர்க்கப் பலப்பல அணுகுண்டுகளை நடமாடவிட்டிருக்கும் இயக்கம்—அடைந்தால் திராவிடநாடு இல்லையேல் இடுகாடு என்ற முரசொலியை விண்முட்ட எழுப்பிக் கொண்டிருக்கும் இயக்கம் நம்முடைய இயக்கம். அன்று முதல் இன்றுவரை அடுக்கடுக்கான ஆபத்துக்களைத் தாங்கி, அவைகளைத் தாண்டி, நாம் வளர்ந்து வந்துள்ளோம். கொள்கை மீதுள்ள பற்றும், மக்கள் நலனுக்குப் பாடுபடும் அக்கரையும் நம்மிடம் குவிந்து கிடப்பதால் 'குள்ளநரி'களின் கொட்டமடக்கி வெற்றிச் சிந்து பாடி வருகிறோம். ஓராண்டிலே நாம் சாதித்திருக்கும் காரியங்கள் உலகில் உள்ள எந்த அரசியல் கட்சியாலும் சாதிக்கப்பட முடியாதவை. இந்தப் பதினொரு மாதங்களிலே ஐநூறுக்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள்—ஆறு மாவட்ட மாநாடுகள்—தினசரி நம் கொள்கைகளை அக்கரையோடு கேட்கிற பல்லாயிரக்கணக்கான மக்கள்—யாரால்? எந்தக் கட்சியால் முடிந்தது, இதுபோல! நம் வளர்ச்சி கண்டு நாமே பூரிக்கிறோம். 'இளைஞர்கள்தானே.........இவர்களால் என்ன முடியும்' என்று நாம் கண்ணீரைக் கொட்டி வெளியேறிய நேரத்தில் கேலி பேசியவர்கள் வெட்கப்படும் அளவுக்கு காரியமாற்றியுள்ளோம். நமக்குள்ள பொறுப்பு தலைமைக் கழகத்திலிருப்பவர்களிலிருந்து சாதாரண தொண்டர்கள் வரை முன்பிருந்ததை விட அதிகரித்திருக்கிறது. அந்தப் பொறுப்பை நினைத்துப் பார்த்தாலே—நாம் எத்தகைய தியாகத் தீயில் குதிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம், எவ்வளவு பெரிய காரியங்களை முடிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என்பது விளங்காமற் போகாது. இந்தப் பொறுப்புச்சுமை மத்தியக் கழகத்திடம் மட்டுமல்ல. மாவட்ட கிளைக் கழகங்கள்—மாவட்டத் தலைமைக் கழகங்களிடமும் சார்ந்ததாயிருக்கின்றது. இந்தப் பொறுப்பை தாங்கி செயலாற்றும் வகையில் ஒவ்வொரு மாவட்டக் கழகமும் ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களும் தங்களை பலப்படுத்திக் கொள்ளவேண்டும். தங்கள் சொந்த முயற்சியிலேயே அமைப்போடு மாவட்டத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டு மத்தியக் கழகத்தை தங்களோடு இணைத்துச் செயல் புரிய



(12-ம் பக்கம் பார்க்க)

# இறுமாந்து கிடக்கும் இந்திய மலான்கள்

## சட்டம் மாறும்–சமூகம் நிலையானது

### வகுப்பு வெறியர்கள் உணரட்டும்

நிறவெறி கோரக் கூத்தாடுகிறது — தென் ஆப்ரிக்காவிலே! மறைந்த உத்தமர் காந்தியார் காலம்முதல் இந்த அநாகரிகப்போக்கை எதிர்த்து உலகு கண்டித்தும், தாக்கியும் வந்திருக்கிறது!

உலக நாடுகள் அத்தனையும் எதிர்த்தாலும் மலான் தனது மட்டரகத் திட்டத்தைக் கைவிடுவதாக இல்லை. ஆம் இனவெறிகொண்டுவிட்டால் விழிகளுக்குப் பார்வை போய்விடும், செவிகள் கேட்கும தன்மையை இழந்துவிடும், சிந்தனையோ சுழன்றடிக்கும் காற்றிலே சிக்கிய காற்றாடிபோலக் கண்டபடி சுற்றுவதும்! நா......தான்பேசுவதைப் பின்னர் திருப்பச் சொல்லக்கூட அறியாது, இனி என்ன பேசப்போகிறோம் என்றுகூட உணராது!

வெறி பலமுறைகளில் ஏற்படலாம்—அதிக வறுமையில், அதிக துக்கத்தில் அதிகமானசிக்கல் நிலையில் வெறி ஏற்படலாம். இது இயற்கை! ஆனால் அதிக மகிழ்ச்சியில், அளவிற்குமீறிய சுகபோகத்தால் ஏற்படுகிற வெறி பயங்கரமானதுதான்!

அந்த வெறி வந்துவிட்டால் தன்னைக்காட்டிலும் மிகத் தாழ்ந்த நிலையிலிருப்பவர்களிடமும் பொறாமை ஏற்படும்-அவர்கள் அனுபவிக்கிற அற்ப சுகத்தையும் தட்டிப் பறிக்கக்கூடத் தவியாய்த் தவிப்பார்கள். அதற்காகப் பெருங்குரலெடுத்துக் கூவுவார்கள். பித்தர்கள்போலச் சத்தம்போடுவார்கள்—சட்டம் பார், சாஸ்திரம் கேள் என்பார்கள். இது விசித்திர வெறி!

மலான் நமக்குப் புதியவரல்ல, நம் நாட்டிலேயே மலான்கள் ஏராளம்! வெறிநிலைகூட நாம் அனுபவித்தறிய முடியாத ஒரு விசித்திரநிகழ்ச்சியல்ல—நாளும் நாம் கண்டு கண்டு கண்ணீர் உகுத்திருக்கிறோம், அம்மாதிரி அநீதிகளை!

அங்கே மலான் சட்டம் போடுகிறார், இங்கே, சட்டமே தாங்கள் எழுதி வைத்ததுதான் என்று தயங்காமல் கூறுகிறார்கள்!

அங்கே கருப்பர் என்ற காரணத்தால் உரிமையென்றால் என்னவென்றுகூட அறியாமல் அந்த காரக்கிடங்கில் ஆழ்த்தப்பட்டுக் கிடக்கிறார்கள்!

மலான் அங்கு இனமண்டல மசோதாவைக் கொண்டுவந்தார். இந்தியா துடித்தது, பாகிஸ்தான் பதை பதைத்தது-நீதி நடுங்கிற்று, நேர்மை தலை குனிந்தது! ஐ. நா. சபையிலேகூட சிறு சலனம் ஏற்பட்டது. கருப்பர் இன்ன இடங்களில் தான் வாழலாம், வேறு இடங்களில் குடியேறவும் கூடாது, நிலம் விற்கவோ வாங்கவோ முடியாது—என்று சட்டம் பேசிற்று — வளர்ந்துவரும் நாகரிகம் சீறிற்று. மலான்பணிந்துவிடவில்லை. சுருண்டு விடவுமில்லை சட்டமாக்கினார். இனத்திற்குஇடம் பிரித்துவிட்டார். நம் இந்தியாவில் சட்டத்தின் பேரால் இல்லாவிட்டாலும்,சாஸ்திரத்தின்பேரால் சமுக பழக்கவழக்கங்களின் துணையினால் 'வகுப்புவாதிகள்' வாழ ஒரு அக்ரகாரமும், உழைப்பாளி மக்கள் ஒதுங்கிக்கிடக்க ஒருசேரியும் இருக்கத்தான் செய்கின்றன. நேற்றுவரை தொழக்கூட அவர்களுக்கு உரிமை தரவில்லை, பள்ளிகளில், வீதிகளில், நல்ல பொதுவிடங்களில் நடமாடக்கூட நம் நாட்டு மலான்கள் அனுமதிக்கவில்லை. புளியமிலாறு சொல்லும் சோகக் கதைகளைக் கேட்டாலே சோர்ந்து விழுந்துவிடுவோம்! இந்தக் குளத்தில் இவன் இறங்கினான், அந்தத் தெருவில் நடந்து சென்றான், இந்த வீதியில் மேல்துண்டும், செருப்பும் அணிந்து சென்றான் என்ற காரணங்களைக் காட்டி அடித்துக்கொன்ற கதைகள் ஆயிரம் சொல்லுமே!

மலான், தென் ஆப்ரிக்காவில் மட்டுமல்ல— இந்தியாவிலும் வாழ்கிறார்கள், எண்ணி முடியாத அளவு அதிகமாக!

* * *

தென் ஆப்ரிக்காவில் புதியதொரு முயற்சி நடந்திருக்கிறது. திருமணத்திலும் நிறவெறி புகுந்துவிட்டது. ஆண்டுகள் பலவாகக் கருப்பரும் வெள்ளையரும் கலந்து வாழ்ந்தனர். மலான் அவர்களைப் பிரித்துப் பேதப்படுத்திடச் சட்டமிட்டார். அவர்கள் மணந்து கொள்வதே தவறு என்றும் சட்டமியற்றி விட்டார்.

பிரியான்டி ஆர்மான்டி என்ற ஐரோப்பியர், டோரதி ஜுஸலின் என்ற சுதேசிப் பெண்ணை மணந்துகொண்டார். இவர்கள் இருவரும் செய்து கொண்ட திருமணம் தவறானது, ஆகவே, மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

வழக்கு மன்றத்திற்கு இழுக்கப்பட்டிருக்கின்றனர், புது மணத் தம்பதிகள் — பள்ளியறைக்குப் பதில் பயங்கர சிறைவாசம்!

இனத்தூய்மை தேடி, மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்ட சட்டங்களை ஏற்பாடு செய்கிறார்கள்.

அத்தோடு அவர் ஆர்ப்பாட்டம் ஓயவில்லை. கருப்பர்களிடையேயும், சாதி விட்டு சாதி திருமணம் செய்யக்கூடாது என்று சட்டம் செய்யப் போகிறார்களாம். ஏன் தெரியுமா? அவர்களுக்குள் ஒற்றுமை பெருகிவிடுமாம்—வெள்ளையருக்கு வலுவான எதிர்ப்பு வந்துவிடுமாம்—எவ்வளவு வஞ்சக உள்ளம்—நச்சு நினைப்பினர்!

நிறவெறிக்குத் துணையாகச் சட்டத்தை இழுக்கிறார்கள்—தென் ஆப்ரிக்காவில் மட்டுமல்ல, உலகின் பிறஇடங்களிலும்! ஏன், நம் தாயகத்திலே கூட, வகுப்பு வெறியர்கள் சட்டத்தின் இடுக்குகளில் புகுந்துகொண்டு விஷத்தைக் கக்கிவிட்டார்கள். தாழ்ந்து கிடக்கும் இனம் எழுந்து நிற்கவும் முடியாதபடி செய்துவிட்டார்கள். வகுப்பு விகிதாசார முறையை, இந்திய சட்டத்தைக் காட்டி ஒழித்துவிட முன்வந்து வகுப்பு வெறிக்கு வெற்றியும் பெற்றுத் தந்துவிட்டார்கள்.

கடல் கடந்து, கண்ணுக்குத் தெரியாத பூமியிலே, வகுப்பு வெறியர்களின் கொடுமையிலே சிக்கிச் சிதைகிறார்கள் நம் இன மக்கள்—கேள்விப்படுகிறோம், துக்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம், வீரங் கொண்டு எழுகிறோம்! இதோ நாம் பிறந்த தாயகத்தில் நம் கண் முன்னால் சமூக மலான்கள் சல்லடங் கட்டி நிற்கிறார்களே! என்ன செய்கிறோம்? இந்தக் கொடுமையின் அளவு அதிகந்தானே! கண்ணுக்கெட்டாத் தொலைவில் கொடுமை அனுபவிப்பதைவிட, உற்றாருக்கும் பெற்றாருக்கும் மத்தியிலே கொடுமைப்படுத்தப் படுவது எவ்வளவு வேதனை!

வெறிகொண்டு விட்டால் அவர்கள் ஆட்டங் கட்டுக்கடங்காமல் தானிருக்கும்! இதில் சட்டம் வேறு அவர்கள் பக்கம்—ஆனால் அவர்கள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

சட்டம், நாம் விரும்பிச் செய்துகொள்வது—அதுவும், படத்திற்கு ஏற்ற கண்ணாடி போடுவது போல! சமூகத்திற்கேற்ற சட்டங்களை நிறைவேற்ற வேண்டும். சுயநல சொரூபங்கள், உரிமையாளர்கள் உறங்கிக்கொண்டிருக்கும் பொழுது தாங்களாகவே செய்துகொண்ட ஏற்பாடுகளைக் காட்டி ஏமாற்றுவது என்பது செல்லாது—அதுவும் நீண்ட நாட்களுக்கு!

மக்கள் மன இருள் ஓடிவிட்டால் சட்டம் தவிடுபொடியாகும் — புது எழுச்சி கொண்டு போரிடுவர். புதிய விதிகளை அமைத்துக் கொள்வர்—இது சரித்திரம் சொல்கிற உண்மை!

வகுப்பு வெறியர்கள் சட்டத்தைச் சதமென நம்பித் தெந்தினம் பாடிக் கிடக்க வேண்டாம்—சட்டம் மாறக்கூடியது, மாற்றக்கூடியது, மாற்றப்பட வேண்டியது! காலமும், சூழ்நிலையும் அதற்கு அடிப்படைகள். சமூக நலன்தான் அதற்குரிய ஒரே குறிக்கோள். இந்திய மலான்கள் ஏனோ இதனை எண்ணாமல் இறுமாந்து கிடக்கிறார்கள்!

✽

### பிறப்பு

—❀—

சிதம்பரம்: நடிகத் தோழர் பி. எஸ். தட்சணாமூர்த்தியின் துணைவியார், 21—8—50 அன்று ஒரு ஆண்குழந்தைக்குத் தாயார் ஆனார் என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறோம்.

✽

## கடல் கடந்த திராவிடர்கள் எழுச்சி

## நவம்பரில் மாநாடு நடத்த முடிவு.

### இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம்

இ. தி. மு. கழக நிர்வாகக்குழுகூட்டம் சென்ற 13—8—50-ம் நாள் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2-மணிக்கு கொள்ளுப்பிட்டியிலுள்ள கழகப்பணிமனையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பதினெட்டு நிர்வாக உறுப்பினர்கள் வந்திருந்தார்கள். எட்டு நிர்வாகிகள் கூட்டத்தின் முடிவைத் தாங்கள் ஆதரிப்பதாக ஒப்புதல் தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தார்கள்.

நிர்வாகிகளை வரவேற்று கழகப் பொதுச் செயலாளர் தோழர் அ. ம. அந்தோனிமுத்து பேசி தோழர் எஸ். கே. மாயகிருஷ்ணனை கூட்டத்திற்கு தலைமை வகிக்கும்படியாய்க் கேட்டுக் கொண்டார். அதை ஆதரித்துத் தோழர் மா. போ. தேவதாசன் பேசினார்.

பின் தோழர் எஸ். கே. மாயகிருஷ்ணன் தலைமையில் நிர்வாகக் கூட்டம் நடைபெற்றது.

1. இலங்கை திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சிக்காக ஓர் படக்காட்சி நடத்தித் தர வேணும் என்று சிலோன் தியேட்டர் நிர்வாகிகளை இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

2 இலங்கை திராவிட முன்னேற்றக் கழக முதலாவது மாநாட்டை நவம்பர் மூன்றாவது வாரம் நடத்துவது என்றும் மாநாட்டுக்கான வேலைகளை மாநாட்டு வரவேற்புக் குழுவினர்கள் துவக்கிச் செய்திட வேணும் என்று நிர்வாகக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

3 இலங்கையில் திராவிடர்களின் சார்பில் நடக்கும் முதலாவது மாநாடாகையில் இதற்கு C. N அண்ணாத்துரை M. A. அவர்கள் வர வேண்டுமென இக் கூட்டம் அவரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

4. இந்தியர் பாக்கிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டப்படி இலங்கை பிரஜையாகின்றவர்களுக்கு குறிக்கப்பட்ட காலம் 1951 ஆகஸ்டு என்றிருப்பதைத் தயவுசெய்து நீடித்திடவேணும் என்று இலங்கை பிரதமர் தோழர் டி. எஸ். சேனநாயகா அவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது. (மேற்படி வேண்டுகோளை ஓர் மகஜர் மூலம் தெரிவிப்பது என முடிவு செய்யப்பட்டது. ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.)

5. இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வரும் ஆண்டிற்குப் புதிய நிர்வாகிகளை உறுப்பினர் கூட்டத்தைக் கூட்டித் தெரிந்தெடுக்கவேண்டும் என இந்நிர்வாகக் கூட்டம் தீர்மானிக்கிறது. மேற்படி தீர்மானத்திற்கிணங்க ஒரு மாத காலத்திற்குள் புதிய தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டது.

6. இலங்கையில் பல்லாயிரக் கணக்கான பாட்டாளி மக்களின் பொருள் குதிரைப் பந்தயத்தால் சூறையாடப் படுவதைக்கண்டு இந்நிர்வாகக் கூட்டம்வருந்துகிறது. இக்குதிரைப்பந்தயத்தைத் தடைசெய்ய வேண்டுமென இலங்கை அரசியலாரை இந்நிர்வாகக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

✽

# பசி, பசியெனப் பதறிடுகின்றனர் மக்கள்!

## பராமுகம் காட்டுகிறது மத்திய சர்க்கார்

### பிரிந்தால் வாழ்வு—இன்றேல் சாவு

### வள்ளிமுத்து வரவேற்புரை

நெல்லை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக முதலாவது மாவட்ட மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் ஈ. வே. அ. வள்ளி முத்து மாநாட்டிற்கு வந்து குழுமியிருந்தவரனை வரையும் வரவேற்றுப் பேசினார். அவரது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:—

"ஏற்கெனவே திருச்சி மாவட்ட மாநாட்டில் தலைமை தாங்கிய பொழுது திராவிட முன்னேற்றக் கழகத் தோற்றத்தைப் பற்றியும், இந்திய அரசியலாரின் போக்கு பற்றியும் பேசியுள்ளேன். ஆகஸ்ட் 15-க்குப் பிறகு சுதந்திரம் அடைந்து விட்டதாகவும், ஜனவரி 26-க்குப் பின் குடியரசு ஏற்பட்டுவிட்டதாகவும் கனவு கண்டு போலிப் பிரகடனம் செய்திருக்கும் இந்திய சர்க்கார் இந்த இந்திய உபகண்டத்திலுள்ள மாகாண சர்க்கார்களை மத்திய சர்க்காருக்கு அடிபணியச் செய்து, வெறும் பஞ்சாயத்துப் போர்டு நிலைமைக்குள்ளாக்கிவிட்டது. எதற்கெடுத்தாலும், மாகாண அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினிடம் மண்டியிட வேண்டிய நிலையை உண்டாக்கிவிட்டது. உதாரணமாக, கனம் கோபால் ரெட்டியார் சமீபத்தில் 6 கோடி ரூபாய் கடன் கேட்டார் மத்திய சர்க்காரிடம் போய். மாகாணத்திலுள்ள நிலையை எடுத்துக் காட்டி, விவசாயிகள், படும் விபரீதத்தை விளக்கிக் கூறி மக்கள் படும் அவதியை அன்பாகச்சொல்லிக் கடன் கேட்ட கோபால் ரெட்டியாரை வெறும் கையுடன் திருப்பி அனுப்பிவிட்டது மத்திய சர்க்கார். அமைச்சர்களுக்கு வெறும் பட்டந்தான் உள்ளதே தவிர, உள்ளதை உரிமையோடு எடுத்துச் செய்ய அதிகாரமில்லை. மக்களிடம் வரி வாங்கும் சர்க்கார் அந்த வரியையே கொடுக்க முடியாத நிலையிலுள்ள மக்களிடம் கடன் கேட்கிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்கு என்று ஓலமிடும் ஆட்சியாளர், அந்த உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டிய சாதனங்களைச் செய்து தரவேண்டிய சர்க்கார், நம் மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு, கிரியாறு முதலிய அணைக்கட்டுகளைக் கட்ட மாவட்டத்து மக்களிடமே மண்டியிட்டுக் கடன் கேட்கிறது. கொழுத்த, கொழுத்த வரிகளை மத்திய சர்க்காரிடம் ஒப்படைத்துவிட்டு எஞ்சி இருக்கும் நிலவரியையும், விற்பனை வரியையும் வைத்துக்கொண்டு நிலைமையைச் சமாளிக்க முடியாத நிலையிலிருக்கின்றனர். மாகாண மக்களின் சுயதேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத சர்க்கார் நமக்குத்தேவையா? சுயஅறிவு படைத்த எவராவது கூறமுடியுமா? அரசியலை அலசிப் பார்க்கும் கனம் காமராஜரைக் கேட்கிறேன். நீர் என்றாவது இந்தச் சென்னை மாகாணத்தில் பசி, பட்டினி என்று கேள்விப்பட்டதுண்டா? அன்னியர் ஆட்சியால் அவலநிலை ஏற்பட்டுவிட்டது என்று அன்று அலறிய காமராஜர், அதே அன்னிய ஆட்சியில் மக்கள் புளியங்கொட்டையைத் தின்று ஜீவித்தார்கள் என்று சொல்ல முடியுமா? கனம் முன்ஷியார் சொல்வது போல் "பசிக்குப் பருத்திக்கொட்டையும் புசிக்கப் புளியங்கொட்டையும் சாப்பிடு" என்று எந்த வேவல் துரைகளாவது, மவுண்ட் பேட்டன்களாவது கூறியதுண்டா? விரல்விட்டுக் கூறமுடியுமா காமராஜரால்? இடதுசாரிக் கட்சிகளை, குறிப்பாக திராவிடர் இயக்கத்தாரைக் குறைகூறிக்கொண்டிருக்கவே அவருக்கு நேரம் போதாமலிருக்க, இதைப்பற்றிச் சிந்திக்க அவருக்கு எங்கே நேரம் கிடைக்கப் போகிறது? உணவுநிலை நாளுக்கு நாள் பயங்கரமாகிக்கொண்டே இருக்கிறது. சட்ட சபையிலே அங்கத்தினர்கள் ஓலமிடுகிறார்கள். பிரதமர் குமாரசாமியாரின் காதுகளோ அதை அசட்டை செய்கின்றன. தோழர் ரோச் விக்டோரியா என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிறார். எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரை அணுகவேண்டியிருக்கிறதே என்பதை எடுத்துக்காட்டுகிறது அவரது பரிதாப நிலைமை.

மாகாண சர்க்கார் மத்திய சர்க்காரைக் கெஞ்சுகிறது, மத்திய சர்க்காரோ மாகாண மந்திரிமார்களைக் குறை கூறுகின்றனர். இவ்விரண்டிற்குமிடையில் மக்கள் பசியால் வாடுகின்றனர். காங்கிரசைக் காட்டி, உத்தமர் காந்தியாரைக் காட்டி, மக்களிடம் ஓட்டுப்பெற்று நிர்வாகத்திலமர்ந்த சர்க்கார் மக்களைப் பற்றிக் கவலை எடுத்துக் கொள்ள மறுக்கிறது. இந்த நிலைமையை எடுத்து விளக்கிக் காட்டி மாகாண அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் பிடியிலிருந்து நீங்கினால்தான் மக்களின் அவதியைப் போக்கமுடியும். அதனால் சென்னை மாகாணம் டெல்லி சர்வாதிகாரத்திலிருந்து நீங்கவேண்டும். "திராவிட நாடு திராவிடர்க்காக வேண்டும்" என்று உரத்த குரலில் பேசும் நமக்கு கிடைக்கும் பரிசு 'தடியடி' சிறைத் தண்டனை, மொட்டையடித்தல்—அது மட்டுமல்ல நம் இயக்கத் தோழர்கள் எழுதும் புத்தகங்களுக்குத் தடை, பத்திரிகைகளுக்கு ஜாமீன், இந்த நிலைமை எத்தனை நாளைக்கு நீடித்துச் செல்ல



முடியும்? மக்களை மதியாது மமதையுடன் ஆண்ட பிரெஞ்சு நாட்டு லூயி என்ன கதியானான்? மக்கள் மன்றத்தின் முன் ரஷ்ய நாட்டு ஜாரின் கொடுமை என்னவாயிற்றென்பதை சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் தெரியுமே! ஏன்! சமீபத்தில் நடந்ததையே எண்ணிப் பார்க்கட்டுமே சர்க்கார். அமெரிக்காவின் அத்யந்த நண்பர் சீனாவின் முடிசூடா மன்னர் சியாங்கே ஷேக் என்ன நிலையிலிருக்கிறார்? சியாங்கே ஷேக்கின் சிம்மாசனத்திலே இன்று மாசேதுங் கொடுங்கோல்மன்னனாக அல்ல மக்களின் பிரதிநிதியாக! ஜனநாயகத்தின் அவதாரமாக அமர்ந்திருக்கிறார்.

குடியரசின் பெயரால் நடக்கும் கும்மாளத்தின் எதிரொலியே கம்யூனல் ஜீ. ஓ. வை சமாதிக்குள்ளே தள்ளிவிட்டது. தாழ்த்தப்பட்டோரைத் தட்டியெழுப்பவும், பார்ப்பனரல்லாத மாணவர்களை முன்னிலைமைக்குக் கொண்டுவரும்பொருட்டு அன்றிருந்த ஆட்சியாளர்களால், குறிப்பாக ஜஸ்டிஸ் கட்சியாரால், வெள்ளுடை வேந்தன் தியாகராயரால் சட்டத்தின்மூலம் கொண்டுவரப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமுறை இன்று அழிக்கப்படுகிறது. குடியரசின்பெயரால். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை என்பது "குடியரசு" உதயமாகிவிட்ட நாட்டில் சாதி, மதபேதத்தை எடுத்துக்காட்டுகிறது என்ற நொண்டிச்சாக்கை எடுத்துக்காட்டும் காங்கிரஸ் சர்க்காரைக் கேட்கிறேன். இந்த நாட்டில் சாதி, மதபேதம் பூண்டோடு அழிக்கப்பட்டுவிட்டதா? ஏழை, பணக்காரன் என்ற முறை நீக்கப்பட்டிருக்கிறதா? தொழிலாளி முதலாளி என்ற பேதம் ஒழிபட்டுவிட்டதா? உழைப்பவன், சுரண்டுபவன் எனும் நிலைமை மாற்றப்பட்டுவிட்டதா? தென்னாட்டான், வடநாட்டான், என்ற பிரிவு ஒழிக்கப்படவில்லை. பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்ற பாகுபாடு நீங்கிவிடவில்லை; பார்ப்பனச்சேரி—பறச்சேரி என்னும் பேதம் ஒழியவில்லை. குடியரசு என்னும் லேபிலை ஒட்டிக்கொண்டிருக்கும் சர்க்காரால்இந்தக்கேள்விகளுக்கு நியாயமாய் பதிலளிக்கமுடியுமா?

சென்னை உயர்நீதிமன்றம் சட்டத்தின் துணை கொண்டு தீர்ப்பளித்துவிட்டது. அதைஎதிர்த்து வழக்காட சுப்ரீம் கோர்ட்டல்ல, கடவுளின் நீதி மன்றமானாலும் சரி, அங்கேயும் செல்லத்தயாராயுள்ளோம் நாம். நீதி நம் கையில் இருக்கும் போது நாம் எங்கு சென்று வழக்காடவும் அஞ்சோம். அங்கும் நீதி கிடைக்கவில்லையாயின் அறப்புரட்சி செய்வோம் என்பதை இறுதி எச்சரிக்கையாக சர்க்காருக்கு அறிவித்துக்கொள்ளுகிறோம்.

பசி, பட்டினி, வறுமை, வேலையில்லாத்திண்டாட்டம் முதலியவைகளைக் குறைக்க, விளைவைப் பெருக்க, கல்வியைப்பரப்ப, நீதி, நேர்மை, நிர்வாகத்தை நடத்த இந்த ஆளவந்தார்களிடம்போதிய திட்டம் இல்லையானாலும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்க, திராவிட இயக்கத்தினரை ஒடுக்க, திட்டம் தீட்டத் தெரியும் அவர்களுக்கு! நம்மை நசுக்கிவிட சர்க்கார் ஒருமுனையிலும் நின்று திட்டமிட்டுக்கொண்டிருக்கின்றனர். திராவிடம் வடநாட்டுச் சுரண்டல் ஆதிக்கம் நிறைந்த மத்திய அரசாங்கத்தின் எடுப்பார் கைப்பிள்ளையாக ஆகிவிட்டது.

திராவிடரை வாழ்விக்க, பழம்பெருமையைக் காக்க திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியுள்ளது. வடநாட்டு, பாசிச சுரண்டல் கொள்கையை ஒழித்து, திராவிடத்தில் தனி சமதர்ம ஆட்சியை நிலைநிறுத்தவேண்டும் என்பது அரசியல் கொள்கையாகவும், ஏழை—பணக்காரன், தொழிலாளி—முதலாளி, அடிமை — ஆண்டை என்ற பேதநிலைமையை உடைத்து சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்பது பொருளாதாரத் துறைக் கொள்கையாகவும், சாதி, மத வேறுபாடு, சமயவேறுபாடுகளை யெல்லாம் ஒழித்து, மனிதனை மனிதன் என்று நினைக்கும்படி யாவரையும் செய்யவேண்டும் என்பது சமுதாயக் கொள்கையாகவும் கொண்டு தி. மு. க. பாடுபடுகிறது.

அந்தக் கொள்கைகளை மனதில் நிறுத்தி, "இன்பத் திராவிடமே எமது இலட்சியம்" என்று எக்காளமிட்டு முழக்கமிட பல்லாயிரக்கணக்காகக் கூடியிருக்கும் உங்களை மீண்டும் வருக வருகவென வரவேற்கிறேன்." என்று கூறி தனது வரவேற்புரையை முடித்தார்.

★

**நமது புதிய ஏஜண்டுகள்**


ஏ. எஸ். நாதன்,
நடராசன் நினைவு நூல் நிலயம்,
கூறை நாடு, மாயவரம்.

ஆர். சிவாஜி,
திருத்துறைப்பூண்டி.

பி. கோவிந்தசாமி,
68, வெங்காரம் பேட்டை, பாப்நாசம்.

எம். எம். சின்னையன்,
மேட்டுப்பட்டி,
சின்னாளப்பட்டி. (மதுரை மாவட்டம்)

எஸ். எஸ். சண்முகம்,
12 வது வார்டு,
போடிநாயக்கனூர். (மதுரை மாவட்டம்)



திராவிடநாடு

ஞாயிறு] 3-9—50 [காஞ்சி

# துடித்துக் கிளம்புங்கள்

✲

"தாய்மேல் ஆணை, தந்தைமேல் ஆணை, தமிழகமேல் ஆணை, தூய என்தமிழ்மேல ஆணையிட்டே நான், தோழரே கிளம்புகிறேன்" என்று வீரப்பண் பாடிவிட்டு, டாசறை நோக்கிப்பாய வேண்டிய கட்டம் வந்துவிட்டது!

காரியமாற்றும் காளைகள் நாங்கள், சுலோகங்களால் சுகவாழ்வு நடாத்தும் சுயநலமிகளைத் "தூரநில்" என்று விளக்கி வெற்றிக் கோட்டம் விரையும் வீரர்கள் நாங்கள் என்று கர்ஜனைஎழுப்பியோர் களத்திலே குதிக்கவேண்டிய வேளை வந்துவிட்டது!

பொதுவாழ்வு — ஒருமுட் புதர் எனினும் அஞ்சோம், எதுவரினும் ஏற்போம் — தடியடியா? பரவாயில்லை, சிறைச்சாலையா? அது, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை! துப்பாக்கியா? சே, நாங்கள் கோழைகளல்ல! என்று வெற்றி முரசு எழுப்பும் வீரர்கள் தங்கள் தோள்வலியைக் காட்ட வேண்டியகாலம் நெருங்கிவிட்டது!

முன்னேற்றப்படை உரிமைக் கோட்டையைப்பிடிக்கப்பாயத் திட்டமிட்டுவிட்டது. சோர்வுதானா எமக்குப் பரிசு, சும்மாயிருக்கத்தானா எங்கள் உழைப்பு—எப்போது அறப்போர், உரிமைக் கிளர்ச்சி' என்று துடித்துக் கிடப்போர் தங்கள் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள அனுமதி தரப்பட்டுவிட்டது — வழி வகைகள் முடிவு செய்யப்பட்டுவிட்டன 27-ந்தேதியன்று கோவில்பட்டியில் கூடிய திராவிட முன்னேற்றக் கழகச்செயற் குழுவினரால். தீர்க்காலோசனைக் குடபின் முடிவு செய்யப்பட்ட அத்திட்டங்களையும், அதுபற்றிய பொதுச்செயலாளர் விளக்கத்தையும் வேறிடத்திலே தந்திருக்கிறோம்.

கழகத்தோழர்கள் சிந்தனையோடு கூர்ந்து அத்தீர்மானங்களைக் கவனிக்கவேண்டுகிறோம்.

வடநாட்டு ஆதிபத்யம் வளர்கிறது, எல்லா வகையிலும் நமது இடுப்பு எலும்புகளை முறித்துப்போட்டவண்ணம். நமது நாடு, சென்னை மாகாணம், சுயநலப் பாம்புகள் உலவுமிடமாகிவிட்டது. கைகளிலே விலங்கு, கால்களிலே கட்டு, கண்ணிலே நீர், வாயிலே பூட்டு, விலாவிலே வேல், வயற்றிலே பசி — வேதனையின் சித்திரமாகிவிட்டது, நம்நாடு. தாங்கமுடியாதநிலை, தத்தளிக்கின்ற காட்சி! இரத்தக்கண்ணீர், நம் இதயத்திலே கொந்தளித்து வழியும் கோரமானகாட்சி!!

வந்தவன் வாழ்வு செழிக்கிறது—வடநாட்டாட்சியின் ஆதிக்கம் வளர்கிறது. மாகாண ஆட்சியின் நிலை கேவலமாகிறது—மக்கள் வாழ்வு வேதனையின் நிலைக்களனாகிவிட்டது. நாம், வழ்ந்த மரபினர்! ஆனால் வீழ்ந்துகிடக்கிறோம் —வஞ்சகர் வரவால், வடநாட்டுப் பிடிப்பால்!

வாட்டி வதைக்கும் வடநாட்டு ஆதிபத்தியம் வளர்கிறது—நம் நாடு நல்வாழ்வு பெறும் அறிகுறி தென்பட வில்லை. இன்று தென்னாட்டின் நிலை—பட்டினிக் கிடங்கு. சரக்குச் சந்தை, சாவுக் கூடம், பித்தர்களின் பீடம்!

நினைக்க முடியவில்லை — நெஞ்சிலே வேல் பாய்வதுபோல நாடு, சுடுகாடாகிக்கொண்டிருக்கிறது.

கோரமான காட்சி—சகிக்கமுடியாத காட்சி! பொறுக்க முடியாது, இனி நம்மால்!!

சிங்கத்தை சிறுநரி சூறையாடும் சூதுச் செயல் தொடர்ந்து நடைபெற இனியும் அனுமதிக்க முடியாது—பொறுத்தது போதும். இனி பொறுமைக்கு இடமில்லை!

எனவே, மக்களிடை வளர்ந்து கிடக்கும் அதிருப்தியை அறிவிக்கும் திட்டங்கள் தந்திருக்கின்றனர், கழகத்தின் செயற்குழுவினர்.

முடிவுகளில் உடனடிச் செய்யப்படவேண்டியது குறித்தும், பிறகு எது எது செய்யப்படும் என்பது குறித்தும் பொதுச் செயலாளர் தமது பேச்சிலே விளக்கியுள்ளார்.

மாகாண மாநாட்டுக்கு முன் செயற்குழுவின் உடனடி முடிவுகளை நிறைவேற்றி உரிமைப் போருக்கு ஆயத்தமாகிக்கொள்ள வேண்டிய பொறுப்பு வந்துவிட்டது கிளைக்கழகங்களுக்கு.

கிளைக் கழகங்களும், கழகச் செயல் வீரர்களும், இதைக் கவனித்து உடனடியாகத் தங்களைத்தயார் செய்துகொள்ளக் கோருகிறோம்.

வடநாட்டு ஆதிபத்யம் வளர்வதை எதிர்க்கிறோம். நமது அதிருப்தியைக் காட்ட முதல்வேலையாக கருப்புக்கொடி காட்ட முடிவு செய்துவிட்டோம்.

அதே நேரத்தில், மாகாண சர்க்கார் நம்மீது வீசும் அடக்குமுறை 'அம்புகளை எதிர்க்கவும் செயற்குழு வழி வகைகளைத் தந்திருக்கிறது.

நாம் ஊமைகளல்ல, ஊர்க்குருவிகளுமல்ல— எல்லாவற்றையும் தாங்கிச் சகித்துக் கிடக்க! நமது வீரமும் வேகமும் நீர்க்குமிழியல்ல—நிமிடத்துக்குள் கிளம்பி மறைந்து விடுவதற்கு!

தேம்பும்தாய், துடிக்கும் மனைவி, எல்லோருடனும் புன்சிரிப்போடு, 'புறப்பட்டேன் போருக்கு' என்று வீரக்குரலெழுப்பும் பரம்பரையிலே வந்தவர்கள். வாழ்வைப்பெற போராடத் தயங்க மாட்டோம்—சங்கடங்கள் எத்தனையேற்பட்டாலும் அவை நமக்குத் தூசுகள்!

ஆகவே, அடக்குமுறையை எதிர்த்து, எழுத்துரிமையைக் காக்கவும் கிளைக் கழகங்களுக்கு அனுமதி தந்திருக்கிறது மத்யக்கழகம்.

அந்த முடிவுகளைக் கூர்ந்து சிந்திக்க வேண்டுகிறோம், கழகத்தவர்களை. எழுத்துரிமை காப்பது குறித்துப் பொதுச் செயலாளர் பேசியிருப்பதையும் காணவேண்டுகிறோம்.

நிலைமைகளுக் கேற்ப உரிமைப் போரில் ஈடுபடவேண்டிய வழியும் முறையும் வகுத்துக் கொள்ளத் தெரியாதவர்களல்ல—நமது கிளைக் கழகத்தினர்.

எழுத்துச் சுதந்திரத்தை நிலைநாட்ட, பேச்சுரிமைக்குப் போராட, வடநாட்டாதிபத்யத்தை எதிர்க்க, உடனடியாக ஒவ்வொரு கிளைக்கழகத்தினரும் ஏற்பாடுகளைச் செய்யக் கோருகிறோம்..

இன்னும் ஒருமாதத்துக்குள் இரயில்வே போர்டு அழிப்புப் போராட்டத்தையும் துவக்க நேர்ந்தாலும் நேரலாம்.

எனவே, புலிநிகர் மாந்தரே, புயல்வேகப் பிரச்சாரத் தோழர்களே, காரியமாற்றும் காளைகளே, கழகத்தின் கண்ணிமைகளே, துடித்துக் கிளம்புங்கள்!

நல்லுரிமை நம்மூச்சு, நச்சுத்தொல்லைகள் போச்சு என்ற சொல் காட்டப்புறப்படுங்கள்! வெற்றி அல்லது வீரச்சாவு என்ற பழம்பெருமை பாடிக்கிளம்புங்கள்—கிழித்தெறிய கோர ஆதிபத்யத்தை, கொடுமைப்போக்கை!

கட்டுப்பாடும், ஒழுங்கும் நமது கரத்திலுள்ள கேடயங்களாகட்டும்! ஒழுங்கையும், ஆர்வத்தையும் கவசங்களாகிக்கொண்டு புறப்படுங்கள்! புலியும் சிங்கமும் எதிர்த்திடினும் இதயங்களங்கா இளம் வீரர்களே எழுப்புங்கள்! நாட்டின் நல்வாழ்வை நிமிர்க்க சுகவாழ்வைத் தத்தம் செய்துவிட்டுக்கிடக்கும் தூங்காப் புலிகளே, தோல்வியறியாத் தோழர்களே கிளம்புங்கள்! கிளம்புங்கள்!!

நமதே வெற்றி!

அடைவோம் உரிமை!!

✲

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களிலே கற்றாழையைத் தின்று ஆறுபேர் மாளவேண்டிய அவலநிலையை உண்டாக்கிய பசி— திருநெல்வேலியிலும் வேறிடங்களிலும் தான் பெற்ற செல்வத்தை — தன் வயிற்றில் கிடந்த வைடூரியத்தை — பத்து மாதம் சுமந்து படாத பாடுபட்டு பெற்ற குழந்தையை, பாலூட்டி சீராட்டி வளர்த்த குழந்தையை, தொட்டிலிலே போட்டு ஆரோரோ பாடி அருமைக் கண்மணியே என்று கொஞ்சிய குழந்தையை — பால்சோறு போட்டு சின்னஞ் சிறு கிண்ணியிலே—பாலன் தவழ்ந்து போகப் போக ஊட்டலாம் என்று இன்பக்கனவு கண்டாளே — அந்தத்தாய், மஞ்சள் நீராட்டி தங்க அணிகள் பூட்டி மனமகிழலாமென இருந்தாளே—அந்தத்தாய், பள்ளிக்குச் செல்லும்போது புத்தகங்களை அடுக்கிக் கொடுத்து மகனின் பின்னழகை ரசிப்பதற்காக வாயிலிலே நின்று கொண்டிருக்கலாமென்று வானளாவக் கோட்டை கட்டினாளே, அந்தத்தாய் —வயிற்றுக்குச் சோறின்றி—வாழ வழியின்றி— வந்தாரை வாழவைக்கும் இந்த நாட்டில் ஐந்து ரூபாய் காசுக்காக—'பிள்ளையோ பிள்ளை!' என்று கூக்குரலிட்டாளாம்...மார்க்கெட்டிலே 'கீரையோ கீரை!" என்று கூவுவதுபோல!

இந்தப் பசிக் கொடுமை நீக்க பாராள வந்தவர் எடுத்துக்கொண்ட முயற்சி எட்டு அவுன்ஸ் அரிசியை ஆறு அவுன்சாக்கியதுதான்! இந்தப் பசி போக்கும் கைங்கரியத்தை செவ்வனே செய்ய யாரும் முன்வரவில்லை. நாமோ நாட்டுமக்களில் ஒரு பகுதி. ஆனாலும் வாயில்லாப் பூச்சிகளல்ல. நமது வார்த்தைகள் முதலில் அலட்சியப் படுத்தப் பட்டாலும் பிறகு அதுதான் 'வேதவாக்'காக மாறியிருக்கிறது பலருக்கு!

தென்னாட்டவர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது அரிசி. பரமசிவனும் பார்வதியும் பக்த கோடிகளும் நிறைந்துகிடந்தாலும், பருவக்காற்று கருணை செய்யாத காரணத்தால் பஞ்சம் தலை தூக்குகிறது! நாட்டில் அரிசிப் பஞ்சம் என்றால், ஆளும் சர்க்காரின் கடமை, எங்கு அரிசி கிடைக்குமோ அங்கிருந்து வரவழைத்து மக்களுக்குத் தருவதுதான். ஆனால் மாகாண சர்க்கார் தங்கள் மக்களின் கண்ணீரைக் கழுவ, அரிசியை வரவழைத்துத் தரமுடியாது. காரணம்? அதற்கான அதிகாரம் மாகாணத்துக்கில்லை — புது அரசியலமைப்புமூலம் மத்திய சர்க்காரிடம் கொண்டு போய்க் குவிக்கப்பட்டிருக்கிறது! ஆகவே, இங்கு மக்கள் பசியால் தவித்தால், மாண்டால், அதைக் கண்டு மனம் பதறும் மாகாண சர்க்கார் எதையும் செய்யமுடியவில்லை. பரிதாபத்தோடு, பிச்சைகேட்பதுபோல மத்ய சர்க்காரை நோக்கிக் காவடி எடுக்கின்றனர். ஆனால் வடநாட்டு மத்ய சர்க்காரோ, அங்கு மிஞ்சிக்கிடக்கும் கோதுமையை அனுப்புகிறது — சையாம், பர்மா, எகிப்து, இத்தாலி போன்ற இடங்களில் குவிந்துகிடக்கும் அரிசியை வரவழைத்துத் தருவதற்குப் பதில், வடநாட்டு மாகாணங்களில் எஞ்சிப்போன கோதுமையை நம் மீது திணிக்கிறது! நாமோ — திண்டாடுகிறோம், நம்மவர்கள் துடித்துச் சாகிறார்கள், பிள்ளையோ பிள்ளை வியாபாரம் நடத்துகிறார்கள்! வேதனை— கண்ணீர் சிந்தக்கூடிய காட்சி-வெட்கப்படவேண்டிய வேதனை! இந்த வேதனையின் விளைவுகளை மாகாண சர்க்காரிலிருக்கும் மந்திரிமார்கள் உணர்ந்தே வருகிறார்கள்! வேதனையைத் திரை போட்டு வெகுநாட்களுக்கு மறைத்துவிடமுடியாது. நாம் புளளிவிவரத்தோடு, தக்க சான்றுகளோடு இன்று கூறுபவைகளை இவர்கள் வீம்புக்காவது மறுத்தாலும் விரைவில் உணர்வார்கள் என்ற அறிகுறித்தென்பட்டே வருகிறது!

நாட்டின் எதிர்காலம், இன்பகாலமாக, மானமுள்ள காலமாக மாற, நாம் விரைவில் போராட்டத்தில் குதிக்கத்தான் வேண்டும். இன்று காலையிலே நான் கொடியேற்றி வைத்தேன். கொடிக் கயிற்றை என் கையில் கொடுத்ததைவிட, ஒரு கையில் தார் சட்டியையும், இன்னொரு கையில் 'பிரஷை'யும் கொடுத்து, புகை வண்டி நிலையத்தில் எழுதப்பட்டிருக்கும்'இந்திக்குமுதலிடத்தை அழித்துவா!' என்று ஆணையிட்டால் ஆனந்தப் படுவேன். வடநாட்டு ஆட்சி, தாய்மொழியைச் சிதைக்கும் வழியில் செய்யும் இக்கோரக் கூத்தைக்காண எங்களால் சகிக்கமுடியவில்லை! ஆகவே, அண்ணா அவர்களே, இதற்கு ஒருவழி சொல்லுங்கள் என்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்! போர்டு அழிக்கும் பணியை என்போன்ற இளைஞர்கட்கு விரைவில் அளிக்க மத்யக் கழகத்தை, வேண்டிக்கொள்கிறேன்.

நம்முடைய கிளர்ச்சிகள் என்றும் தோற்றதில்லை. அடக்குமுறைகளை வீசியபோதும்—சிரச்சேதம் செய்வோம் என்று மிரட்டினாலும்-சிறைச்சாலையிலே அடைத்தபோதும் நாம் பயந்து பின்னடைந்ததில்லை. அந்த அஞ்சாநெஞ்சத்துடன் — அழகிரிசாமியை நினைத்துக்கொண்டு அண்ணாவின் படைவரிசையிலே சேரவேண்டுமென்றுதான் திராவிடப் பெருமக்களை அழைக்கிறேன்.

அடக்குமுறையை எதிர்த்து ஒரு போர்! புத்தகங்களின் தடையுத்தரவை எதிர்த்து ஒரு போர்! நாடகத்தடைகளைமீறி ஒரு போர்! எல்லாவற்றையும் சேர்த்து ஒரு போர்! இந்தப் போர்களிலே கலந்து வாகைமாலை சூடவாரீர், தோழர்களே! பாண்டியன் பரம்பரையினரே! சேரன் சந்ததியினரே! சோழனின் சொந்தக்காரரே! வாரீர்! சிறுத்தையின் உறுமல் சிங்கத்தின் சீற்றம் கருப்புள்ளம்படைத்த கழுதையே அங்கேன் கனைக்கிறாய் என்று கேட்டிட வாரீர்! ஆண்டஇனத்தால் மீண்டும் முற்றுகை — மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று என்று மார்தட்டிட வாரீர்!

குடித்திடுவோம் உயிர், கொடுத்திடுங்கள் நாட்டை, பிரிவினை வேண்டாமெனும் பெரும் உபதேசம் நரிகளின் ஊளை நாட்டு வெறிபிடித்தகாளைகளே! கிலிபிடித்த மனிதர்களைக் கிழியெறியுங்கள்! புலி வாழ்வின்உச்சியிலே புதுமைதனைப் பொறித்திடுவோம்! என்று புரட்சிப் பண்பாடிட வாரீர்!

வாரீர் வாரீர்......வாலிப வீரர்களே! வைர நெஞ்சுடைத் தோழர்களே! வன்மை நிறை பெரியோர்களே!" என்ற முழக்கத்தோடு முடித்தார்.

(நிருபர்)

# வளரும் தொடர்கதை நம் இயக்கம்

## இருக்கிறோம், அழியவில்லை—ஏன்?

## முக்கால் மாலை முடிந்துவிட்டது

### கோவில்பட்டியில் திருச்சி சீனுவாசன்

நெல்லை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக முதலாவது மாநாட்டினைத் திறந்துவைத்து தோழர் டி. கே. சீனுவாசன் தமது சொற்பொழிவின்பொழுது குறிப்பிட்டதாவது:—

திராவிட இயக்கத்திலே, தலைவரின் தகாத போக்கால் ஏற்பட்ட சூறாவளி, காலப்போக்கில் சிறு புயலாகி, கடைசியாக மென்காற்றாகிவிட்டது. ஆனால், மலர்த் தோட்டம் மண்மேடாகிவிடும் என்று எண்ணிப் பூரித்த எதிரிகள் மனதிலேதான் இன்று பெரியதொரு பூகம்பம் ஏற்பட்டுவிட்டது என்று குறிப்பிட்டார், தனது பேச்சின் தொடக்கத்தில்!

**பூணூல், வெறும் நூலாகும்வரை!**

நாம் பிரிவதால், அல்லது அழிவதால் களிப்போ மகிழ்ச்சியோ அடையவேண்டிய தேவை என்ன ஏற்பட்டிருக்கிறது சிலருக்கு? நாம் என்ன அவ்வளவு எளிதில் அழிந்துவிடக் கூடியவர்களா? அல்லவே! நம்மை எந்தெந்தச் சூழ்நிலைகள் உண்டுபண்ணினவோ அந்தச் சூழ்நிலைகள் அழியுமட்டும் நாம் இருப்போம்—அழியமாட்டோம். இன்று ஆவணி அவிட்டம். ஜாதி வேற்றுமையின் சின்னமான பூணூல் புதுப்பிக்கப்படும் நாள். தி. மு. க. இருக்கும்போது அச்சத்துடன் ஏறும் பூணூல் நாம் அழிந்து போனால் ஆணவத் தோடல்லவா அந்தணர் மார்பிலே மலரும். பூணூல் புதுப்பிக்கப்படும் வரை நாமும் இருப்போம். என்று அது வெறும் நூல் என்றாகிறதோ அன்றுதான் நாம் அழிவோம். நாம் இன்று நேற்றிருந்தவர்களல்ல. சமணர்களாக இருந்தோம். அப்போது அஹிம்சை நம் இதயத்தில் புகுந்திருந்தது. கழுவிலேற்றப்பட்டோம். அழிந்தோமா? நந்தனாக உருவெடுத்தோம். அப்போது பழைமை நம்மிடத்திலே கலந்திருந்தது. உயிரோடு கொளுத்தப்பட்டோம். ஒழிந்தோமா? இராமலிங்கராகத்தோன்றினோம். அப்போது பக்தி நம்மிடத்தில் உறவாடியது-குழிதோண்டிப் புதைக்கப்பட்டோம். மறைந்தா போனோம்? இல்லையே, பரிணமித்திருக்கிறோம். ஆகையால் நம்மை எந்தச் சூழ்நிலைகள் உண்டுபண்ணினவோ அந்தச் சூழ்நிலைகள் திருத்தப்பட்டால்தான், போக்கப்பட்டால்தான், நாம் அழிக்கப்படுவோம்!

ஒரு இயக்கத்திலே உள்ள பிரிவு அதன் இலட்சியத்தைக் கெடுத்துவிடாது. காங்கிரஸில் திலகர், காந்தியார், அன்னிபெஸன்ட் அம்மையார் இந்த மூவரும் தனித்தனியாகத்தான் பிரிந்திருந்தார்கள். 1930ம் ஆண்டு வரை முஸ்லீம் லீக் ஜின்னா தலைமையில் ஒரு பிரிவாகவும், சர். ராபி அஹமத் தலைமையில் ஒரு பிரிவாகவும் இருக்கத்தான் செய்தது. அழிந்தா போனது! ஆகையால் பிரிவு பிரச்சினையைப் போக்கிவிடாது.

**உதிர்ந்த மலர்கள்**

நாம் வளர்ந்திருக்கிறோம். மாற்றுக் கட்சித் தோழர்கள் கண்டு மனம் பதைக்கும் நிலைக்கு வளர்ந்திருக்கிறோம். ஆனால் முழுதும் வளர்ந்துவிடவில்லை. ஒரு மாலையில் மலர்களாக இருந்த நாம் மாலையைத் தொடுத்தவருடைய சாமர்த்தியக் குறைவால் உதிர்ந்து போனோம். உதிர்ந்த மலர்களை ஒன்று சேர்த்துத் தொடுக்கத் தொடங்கினோம். ஆறு மாவட்டங்களை வலுப்படுத்திவிட்டோம். இன்னும் நாலு மாவட்டங்கள் எஞ்சியிருக்கின்றன. ஆகையால் மாலை முக்கால் பங்குதான் முடிந்திருக்கிறது. எனவே இதற்குள் ஏன் அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்று கேட்பது முக்கால் பங்கு முடிந்த மாலையை யார் கழுத்திலாவது போட்டுவிடவேண்டும் என்று துடிப்பதைப் போலாகும். ஆகையால் முழு மாலையாக ஆக்குவோம். பின் யார் கழுத்திலாவது போடுவோம். அப்போதுதான் மாலைக்கு போடுவதிலும் அர்த்தமிருக்கிறது.

நம்முடைய வளர்ச்சி ஆளுகிற சர்க்காருக்கு ஆபத்தாகத் தெரிகிறது. புத்தகத்தின் மேல் நடவடிக்கை எடுக்கிறார்கள். பத்திரிகைக்கு ஜாமீன் கேட்கிறார்கள்."

பிறகு சர்க்காரின் அடக்குமுறைகளைக் கண்டித்தார். அவர் மேலும் பேசியதாவது:-

**குற்றப் பட்டியல் காட்டட்டும்**

நாம் சர்க்காரைக் கேட்பதெல்லாம் சர்க்கார்—நம்மேல் நடவடிக்கை எடுக்கும் சர்க்கார்—நாம் இந்த நாட்டுக்கு எந்தவிதத்தில் நலிவு ஏற்படுத்தினோம் என்று விளக்கட்டும். கம்யூனிஸ்டு தோழர்கள் மேல் நடவடிக்கை எடுக்கும்போது அவர்களுடைய சதித் திட்டங்கள், நாசவேலைகள் முதலியவற்றைத் தொகுத்துப் புத்தகமாக ஆக்கி வெளியிட்ட சர்க்கார் உண்மையிலேயே நாமும் குற்றவாளிகள் என்றால் நம்மைப்பற்றி அவர்கள் தெரிந்துகொண்ட உண்மைகளை வெளியிடட்டுமே. திருடினோமா? பொய் சொன்னோமா? அக்ரகாரங்களைக் கொளுத்தினோமா? அய்யர்கள் பூணூல்களை அறுத்தோமா? என்ன கொடுமை செய்தோம் சர்க்கார் நடவடிக்கை எடுக்க?

**வகுப்புக் கிளர்ச்சி—யாரால்?**

சர்க்கார் சொல்வதெல்லாம் நாம் வகுப்புவாதம் பேசி வகுப்புகளுக்குள்ளே கிளர்ச்சியைத் தூண்டிவிடுகிறோம் என்பதுதான். நாம் கேட்கிறோம் நாங்கள் பேசிய வகுப்புவாதத்தால் சிறு சலசலப்பாவது நாட்டில் ஏற்பட்டது என்று சர்க்காரால் நிரூபித்துக் காட்ட முடியுமா? அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் தன் வகுப்புக்காக வழக்கு மன்றத்திலே செய்த வாதம் எவ்வளவு பெரிய கிளர்ச்சியை உண்டுபண்ணியது. பள்ளிக்கூடங்களில் வேலை நிறுத்தம்—கடைகள் மூடப்பட்டன—சர்வ கட்சித் திராவிடர்களும் கட்சிவேற்றுமைகளையும் மறந்து ஒன்றுபட்டுக் கண்டித்தனர். சிறு சலசலப்புகூட தோன்றாதபோது நம்மேல் நடவடிக்கை எடுத்த சர்க்கார் பெரிய பரபரப்பையே உண்டுபண்ணிய அல்லாடியின்மேல் 153-A செக்ஷன்படி ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? அல்லாடிகள் ஆணவத்தோடு உலவ, ஆசைத்தம்பிகளின் அழகான கிறுப்புகள் காணிக்கை கொடுக்கப்பட வேண்டுமா? அல்லாடிக்குச் சர்க்கார் அஞ்சிப் பதுங்குகிறதா?

வகுப்புவாரி முறையை நாம் ஆதரிக்கும் போது ஜாதி முறை இருக்கவேண்டும் என்கிறோம் என்பதல்ல அதன் அர்த்தம். ஜாதியை ஒழிப்பது வேறு—ஜாதியால் விளைந்த அநீதியை ஒழிப்பது வேறு.

ஜாதி ஒழிப்பு வேலையில் பார்ப்பனர்களும் ஒத்துழைக்கிறார்கள் என்பதில் அர்த்தமில்லையென்றும், உண்மையில் செய்யப்படவேண்டியதை அவர்கள் செய்யவில்லையென்றும் குறிப்பிட்டார். மேலும் தொடர்ந்து பேசுகையில்,

**கலப்பு மணம் தேவை**

ஜாதி ஒழியும் வழி கலப்பு மணம் ஒன்றுதான் சிறந்த வழியென்று குறிப்பிட்டார். அம்பேத்கார் யார்? ஐந்தாம் ஜாதி—பஞ்சமர்—சேற்றிலே ஜனித்து சகதியிலே வாழ ஆண்டவனால் படைக்கப்பட்டவர். அவருக்கு அந்தணர் குலம் ஒரு பெண்ணைக் காணிக்கையாகக் கொடுத்திருக்கிறது. தேவதாஸ் காந்தி எந்த ஜாதி? வைசியர்—பிரம்மாவின் இடையிலே இருந்து பிறந்த ஜாதி! உலகத்தை உபநிஷத்பலகணி வழியாகப் பார்க்கும் ஆச்சாரியார் தம் திருக்குமாரியை அவருக்கு வாழ்க்கைத் துணைவியாக்கியிருக்கிறார். ஏன்? அறிவு அந்தஸ்து இரண்டிலும் இவர்கள் உயர்ந்ததால்! நாம் நம் இன மாணவர்கள் படிக்க—வாழ்வில் உயரவேண்டும் என்கிறோம். அம்பேத்கார்களை உருவாக்க — தேவதாஸ்காந்திகளை உண்டாக்க—அதனால் ஜாதியை ஒழிக்க!

**வகுப்புரிமைப் போர்**

நாம் வகுப்புவாரி உரிமையை ஆதரிப்பது—அது இருக்கவேண்டும் என்பது-சகலருக்கும் சம உரிமை இருக்கவேண்டும் என்பதாலேயே தவிர தகுதி திறமையை அழிக்க அல்ல! ஆகையால்தான் பள்ளியில் சேர்க்கும் போதும் வேலைக்கு எடுக்கும்போதும் வகுப்புவாரி முறை தேவை என்கிறோம். தகுதி திறமை ஒழிக்கப்படவேண்டும் என்று எண்ணியிருந்தால் காலேஜில் நுழையும் போது வகுப்புவாரி முறை கேட்டிருக்க மாட்டோம். ஒரு வகுப்பை விட்டு இன்னொரு வகுப்புக்கு மாறும்போது வகுப்வாரியாகத்தான் அனுப்ப வேண்டும் என்று கேட்டிருப்போம். மாணவர் தகுதி, திறமை இவைகளை நிர்ணயிக்கும் போது நாங்கள் வகுப்புவாரி முறையைக் கேட்கவில்லை. மாணவர்கள் கலாசாலையில் நுழையும் போதுதான் கேட்கிறோம்.

**தகுதி, திறமை**

மார்க் வாங்குவதுதான் தகுதி திறமைக்கு எடுத்துக்காட்டா? மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் பழக்கத்தில் தேர்ந்தவர்கள், சந்தர்ப்பவசத்தால் குறிப்பிட்டுப் படித்தவைகளையே பதிலாகப் பரீட்சையில் எழுதும்படி நேரிடுபவர்கள் இவர்கள் எல்லாம் சுலபமாக மார்க் வாங்கிவிட முடியுமே. அர்த்தம் தெரியாமல் வேதத்தை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதே அவர்களுடைய தொழிலாக—வாழ்வை நடத்தும் வழியாக—அமைந்ததால் எளிதில் மார்க் வாங்கிவிட அவர்களாலே முடியும்.

மேலும்அவர், திராவிட இனத்திலே—அரசியலிலே பொருளியல் துறையிலே, வைத்தியத்திலே இலக்கியத்திலே, கவிபுலமிலே தகுதியும், திறமையும் உள்ளவர்கள் எத்தனையோ பேர்கள் உண்டு,

(12-ம் பக்கம் பார்க்க)

# சேலம் கல்லூரித் தலைவர் மறைவு

## திராவிட மாணவ உலகின் கண்ணீர்

சேலம் கல்லூரித் தலைவர் ஏ. இராமசாமி அவர்கள் மறைவு குறித்து திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் சார்பில் தோழர் கே. எ. மதியழகன் கீழ்க்கண்ட அனுதாபச் செய்தியை அறிவிக்கிறார்.

சேலம் கல்லூரித் தலைவர் ஏ. ராமசாமி அவர்கள் காலமானார் என்ற செய்தி கேட்டு திடுக்கிட்டேன். திரு ராமசாமி அவர்களின் மறைவால் திராவிட மாணவர் உலகம் நல்லதொரு வழிகாட்டியை இழந்துவிட்டது. ஆதிக்கபுரியினரின் காலடியில் சிக்கிச் சீரழியும் கல்வி மண்டலத்திலே திராவிட மாணவர்களுக்கு ஒப்பற்ற துணைவராய், தூண்டாவிளக்காய் இருந்தவர் காலஞ் சென்ற பேராசிரியர். கல்வித் துறையிலே விழிப்பு ஏற்பட்டுவரும் இந்த நாட்களிலே அவர் மறைந்தது ஈடு செய்ய முடியாத நஷ்டம், அவரால் காலி செய்யப்பட்டுள்ள இடத்தை சுலபமாக அடைக்கப்பட முடியுமா என்பது சந்தேகந்தான். அவரது மட்டற்ற தமிழார்வம் அவரின் மங்காத புகழுக்குக் காரணமாயிற்று. இந்திக் கிளர்ச்சி பற்றி, "இந்தியை ஒழிக்க என்போன்றாரும் சிறை செல்லவேண்டும் என்ற நிலை வருமானால் எனது கல்லூரித் தலைமைப் பதவியை ராஜினாமா செய்துவிட்டு போராட்டத்தில் குதிப்பேன்" என்று கூறிய தியாக உருவம் அவர். அவர் போன்றாரை அழைக்கவேண்டிய அவசியமில்லாமலேயே கட்டாய இந்தியை விரட்டி அற்புதமான வெற்றியைப் பெற்றுத் தந்தோம். திராவிட மாணவர் இயக்கம் வகுப்புரிமைக்காக போர்க்கோலம் தாங்கி புறப்பட்டிருக்கும் இவ்வேளையில் இயற்கை அவரை நம்மிடமிருந்து பிரித்துவிட்டது. திராவிட மாணவர்களின் முதல் மாநாட்டில் தலைமை தாங்கி அவர் ஆற்றிய உரையும், விவேக மொழிகளும் நமக்குப் பேருதவி புரிந்திருக்கின்றன. அப்படிப்பட்ட மாவீரரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாரின் துக்கத்தில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் பங்கு கொள்கிறது. அவர்களுக்கு கண்ணீரோடு கூடிய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

★

# மாகாண நலன் கருதா மத்திய சர்க்கார் மந்திரிகளை பகிஷ்கரிப்போம்!

# கருப்புக் கொடி நீட்டி, நாடெங்கும் நம் வெறுப்பைக் காட்டுவோம்

## வேண்டாத இந்தி தலைமை வகிக்கும் இரயில்வே போர்டு அழிக்கவும் போராட்டம்

## எழுத்துரிமை பறித்திடும் போக்கினை எதிர்த்துப் போரிடவும் அனுமதி

## தொடங்கிவிட்டோம் கிளர்ச்சி என முரசு ஒலித்தது!

### கழகச் செயற் குழுவின் தீவிர முடிவுகள்

★ "வடநாட்டு ஆதிக்கத்தை மக்கள் உணரவும், அரசியல், பொருளியலில் அல்லற்படும் நிலைமை ஏற்பட்டிருப்பதை உணரவும், சென்னை சர்க்காரின் நிலைமையே இந்த வடநாட்டு ஆதிக்கத்தால் சங்கடமானதாக ஆகிவிட்டதை உணரவும் தலைப்பட்டிருப்பதை செயற்குழு கண்டு, இனிப் பொதுமக்கள், வடநாட்டு ஆட்சி முறையை வெறுக்கிறார்கள் என்பதை, மத்தியசர்க்கார் அறியும்படிச் செய்யவேண்டும் என்று கருதுவதுடன், திராவிடநாடு திராவிடருக்கு ஆகும் மூலாதார வேலைத் திட்டத்தைத் துவக்கவேண்டும் என்று கருதுவதால், இனி, திராவிட நாட்டுக்குவரும், மத்தியசர்க்கார் தலைவர், மந்திரிகள் ஆகியோருக்குப்பொதுமக்களின் அதிருப்தியைக் காட்டும் வகையில் கருப்புக்கொடி காட்டவேண்டும் என்று தீர்மானிப்பதுடன், இந்தக் காரியத்தை அந்தந்த ஊர் கிளைக்கழகமே, செய்யவேண்டும் என்று தீர்மானிக்கிறது.

★ திராவிடரின் தன் மானத்தைச் சிதைக்கும் விதமாகவும், இந்தி ஆதிபத்யத்தைப் புகுத்தும் முறையிலும், இரயில்வே ஸ்டேஷன்களிலே இந்தியில் முதலிடமாகப் பெயர் பொறித்திருப்பதைத் திராவிடர்கள் சகித்துக்கொண்டிருக்க மாட்டார்கள் என்று சர்க்காருக்குத் தெரிவிக்கிறது.

(அ) இந்த முறையை உடனே மாற்றித் தமிழுக்கு முதலிடம் இருக்கும்படி போர்டுகளைத் திருத்துமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

(ஆ) இதற்காக, சர்க்காரிடம் கடிதப் போக்குவரத்து நடத்தப் பொதுச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கிறது.

(இ) சர்க்கார் இதற்கு இணங்காவிட்டால், செயற்குழு, இந்த இழிவு நீக்கத்துக்காக நேரடி நடவடிக்கை தீட்டவேண்டும் என்று செயற்குழு தீர்மானிக்கிறது."

கடந்த ஆக. 27-ந்தேதி மாலை 7-மணிக்கு கோவில்பட்டி தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அலுவலகத்தில் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை தலைமையில் கூடிய திராவிட முன்னேற்றக்கழக செயற்குழு (காரியக் கமிட்டி) பிரிவினைப் போருக்கு விதித்திடும் இரண்டு போராட்டத்திட்டங்களை, வெளியிட்டது.

கூட்டத் துவக்கத்தில் நாட்டின் நிலைமைகளைப்பற்றியும் கழக நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் மேற்கொண்டு ஆற்றவேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்தும் விளக்கியபின், மேற்குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள், பலத்த ஆலோசனைக்குப்பின், ஏகோபித்த ஒப்புதலோடு நிறைவேற்றப்பட்டன. இன்றைய செயற்குழுவின் திட்டங்களும் தீர்மானங்களும் திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். வீர உணர்ச்சியோடு, செயற்குழு உறுப்பினர்களான தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, அழகரடி முத்து, பொன்மலை பராங்குசம், நாகர்கோயில் வி. எம். ஜான், எம். எஸ். சிவசாமி, கே. எம். கண்ணபிரான், சிவசண்முகசுந்தரம், ஈ. வே. அ. வள்ளிமுத்து ஆகியோர் கலந்துகொண்டு பேரார்வத்தோடு கருத்துக்களை வெளியிட்டனர். தோழர்கள் சேலம் சித்தையன், சி. பஞ்சாட்சரம், அம்பில் தர்மலிங்கம், எம். எஸ். எம். மொய்தீன் ஆகிய உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வர இயலாத நிலைமை குறித்து வருந்தியும், செயற்குழுவின் தீர்மானங்களைக் கடைப்பிடிக்க ஒப்புதல் அளித்தும் கடிதமூலமும் தந்தி மூலமும் தெரிவித்திருந்தனர்.

தீர்மானங்களை நிறைவேற்றி, கழகத்தின் முடிவுகளை வெற்றி காணும் வழி வகைகள் குறித்துக் கடைசியாகப்பொதுச்செயலாளர் விளக்கினார். எழுச்சியும் உணர்ச்சியும் வழிய, பூரிப்போடு புதுப் போரின் திட்டங்களை வெற்றியாக்குவோம் என்ற வெற்றிக் களிப்போடு செயற்குழுக் கூட்டம் முடிவுற்றது. செயற்குழு, நிறைவேற்றிய தீர்மானங்கள்:-

1. கம்யூனல் ஜி. ஓ. சம்பந்தமாக எல்லாக் கட்சி மாநாடு கூட்டவோ, அல்லது வேறு யாருடைய முயற்சியாலாவது கூட்டப்படும் எல்லாக்கட்சி மாநாட்டில் கலந்தோ, தக்க தோர் கிளர்ச்சித் திட்டம் வகுக்க, செயற்குழு பொதுச் செயலாளருக்கு அனுமதி அளிக்கிறது.

2. (அ) பேச்சுரிமையைப் பறிக்கும் முறையில் இருக்கும் சர்க்காரின் போக்கை மக்கள் உணரச் செய்யவும் மாற்றவும், பேச்சுரிமை எழுத்துரிமையை நிலை நாட்டவும், முதலடியாகத் தடை செய்யப்பட்ட நாடகங்களை பொதுச் செயலாளரிடம் அனுமதி பெற்று நடத்த, ஒவ்வொரு ஊர்க்கிளைக் கழகமும் முன்வரவேண்டுமென்று செயற்குழு தீர்மானிக்கிறது.

(ஆ) சர்க்காரால் தடை செய்யப்பட்டும், எழுதியது குற்றம் என்று தீர்மானிக்கப்பட்டும் இருக்கும், புத்தகங்களில் உள்ள கருத்துக்களை, துண்டு வெளியீடுகள், கையெழுத்துக்கள் மூலம், நாட்டிலே பரப்பும் திட்டத்தை செயற்குழு அங்கீகரிப்பதுடன், இந்தத் திட்டத்திற்கான அணியை அமைக்கச்செயலாளருக்கு அனுமதி அளிக்கிறது.

வடநாட்டு மத்திய சர்க்கார் மந்திரிமார்கள் இங்கு வரும்போது கருப்புக்கொடி காட்டி, நமது அதிருப்தியைக் காட்டிக்கொள்ளும் தீர்மானம், அடுத்து நிறைவேறியது.

(4) உணவு நெருக்கடியைத் தவிர்க்க, உடனடியாக வெளி நாட்டிலிருந்து உணவு தான்யங்களை இறக்குமதி செய்யவேண்டும் என்று சர்க்காருக்குக் கூறுவதுடன் திராவிடத்தின் மீது உணவு நெருக்கடியைச் சாக்காகக் காட்டி, கோதுமையைத் திணித்துப் புதிய ஆபத்தை உண்டாக்க வேண்டாம் என்று எச்சரிக்கிறது.

ஐந்தாவது தீர்மானமாக இரயில்வே நிலையப் போர்டுகளில் தமிழுக்குத் தரப்பட்டிருக்கும் அநீதி களையப்படவேண்டும், இல்லையெனில் போர்டு அழிப்புப் போராட்டம் துவக்க நேரும் என்பது முடிவு செய்யப்பட்டது.

✲

காரியக் கமிட்டியார் நிறைவேற்றிய உடனடிப்போராட்டத் திட்டங்களான இரண்டு தீவிரத் தீர்மானங்களை விளக்கிப் பொதுச் செயலாளர், அண்ணாதுரை தமது மாநாட்டுச் சொற்பொழிவில் குறிப்பிட்ட பகுதி இங்கு தரப்படுகிறது.

### ஆதிக்கம் வளர்கிறது!

வடநாட்டின் ஆதிக்கம் நம்மீது வளர்ந்து கொண்டே போகிறது. அதை எதிர்த்து, வாகைசூடிட வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். அதற்கான காரியங்களைச் செய்ய வீர உணர்ச்சி வேண்டும் — 'திட்டம் வேண்டும், திட்டம் வேண்டும்' என்று எனது தம்பிமார்கள் துடிக்கிறார்கள். திட்டங்கள் இருக்கின்றன, ஏராளம்! அவைகளைப் பற்றி மக்களிடை புயல் வேகத்தில் பரப்பும் பிரச்சாரத் தோழர்களும் இருக்கிறார்கள்! அவைகளைத் திடமனதோடு நிறைவேற்றும் பொறுப்பும், கட்டுப்பாடும் நமது கழகத்தவரிடையே வளர்ந்தால் — நமது இலட்சியபுரிப் பயணம் நெருங்கிவிடும். விரைவில் வெற்றிப் பெற்று வருவோம்! அத்தகைய சூழ்நிலையைச் சோதிக்கும் ஆசையுடன், துடித்து நிற்கும் எனது தம்பிமார்கள் முன் பரீட்சார்த்தமாக இரண்டொரு திட்டங்களைத் தருகிறேன். அதில் ஒன்றுதான் வடநாட்டு மந்திரிகளுக்குக் கருப்புக் கொடிபிடிப்பது. தனிப்பட்ட முறையில் நாம் அவர்களை வெறுக்கவில்லை — நேசிக்கவும் காரணமில்லை. ஆனால் அவர்கள் ஆதிக்கத்தால் அழிகிறது, நாடு! அதைக் காட்டக் கருப்புக் கொடி!! பல பிரச்சினைகள் நம்மைச் சூழ்ந்து கிடக்கின்றன. இதைத் தீர்க்க முடியவில்லை — தீர்க்க முயலும் மாகாண சர்க்காரையும் திகைக்கச் செய்கிறார்கள். ஆகவே நம்மிடை வளர்கிறது, அதிருப்தி! அதை, அவர்களுக்குத் தெரிவிக்கக் கருப்புக்கொடி!!

வடநாட்டு மந்திரிமார்கள் வந்தால், அவர்கள் உங்கள் கரங்களிலெல்லாம் கருப்புக்கொடியையே காணவேண்டும்! சிற்றூரோ, நகரமோ எங்கானாலும் அவர்கள் கண்களில் கருப்பே காணப்படவேண்டும்! 'உணவில்லாது எங்கள் குடும்பங்களைப் பட்டினி போடுகிறாயே — அடுக்குமா?' என்று கேட்டு தாய்மார்கள், அடுப்பங்கரையிலிருக்கும், கரித்துணியைக்காட்டி அவர்களை வரவேற்க வேண்டும்! கரித்துணி கிடைக்கவேண்டுமே என்ற கஷ்டம்கூட இல்லை நமக்கு — நமது உழைப்பால் உடம்பிலிருந்து வழியும் வியர்வையைத் துடைத்து அதைக் காட்டுங்கள் — போதும்!!

### டெல்லி, சலோ!

வடநாட்டு மந்திரிமார்களை நோக்கிக் கூறுங்கள், 'டெல்லி சலோ!' 'டெல்லிக்குத் திரும்பிச் செல்!' என்று. அவர்கள் இங்கு வந்தால், நமது அதிருப்தியைக்காட்டும்வகையில் கருப்புக்கொடியோடு, 'திரும்பிச் செல் டெல்லிக்கு!' என்ற முழக்கம் நாடெங்கும் எழும்பவேண்டும்!

வடநாட்டு மத்திய சர்க்காரில் மந்திரியாக இருக்கும் எவர் வந்தாலுஞ் சரி, கருப்புக்கொடி காட்டப்பட வேண்டும்! நமது கழகங்களிருக்குமிடங்களிலெல்லாம் அவர்களைக் கருப்புக்கொடியே வரவேற்க வேண்டும்! வடநாட்டு ஆட்சியில் நமக்குத் திருப்தியில்லை. நமக்கான நலனில் இந்திய ஆட்சி அக்கரை காட்டவில்லை. நமது தேவைகளை வடநாட்டு மத்திய ஆட்சி மதிக்கவில்லை. நம்மை இழிநிலையில் வைத்துச் சித்திரவதைப்படுத்தும் வடநாட்டு ஆட்சியை நாம் விரும்பவில்லை — நமக்கு அதிருப்திதான் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நமது அதிருப்தியைத் தெரியப்படுத்த, அங்கிருந்து எந்த மந்திரி வந்தாலும், கருப்புக்கொடி பிடிக்கப்பட வேண்டும். 'தயாரா?' என்று கேட்டதும், கூடியுள்ளோரெல்லாம் கரங்களை உயர்த்திக் காட்டிவிட்டீர்கள். ஆனால் இந்த வீர உணர்ச்சியிலிருந்து வழுக்கி விழுந்துவிடக் கூடாது. நமது உரிமைக் கிளர்ச்சியை, எதிரிகள் கேலி செய்யுமாறு விட்டு விடாதீர்கள்!

கருப்புக்கொடி காட்டினால் சுலபத்தில் விட்டுவிட மாட்டார்கள், ஆளவந்தார். சிறைக்குள்ளே தள்ளலாம்! தடிகளால் தாக்கலாம்! சித்திரவதை செய்யலாம்! இவைகளையெல்லாம் ஏற்று, தியாகத் தழும்புகளோடு, நமது இலட்சிய கீதத்தின் பெருமையை உயர்த்தவேண்டும்!

இதை உடனடி வேலைத் திட்டமாக நமது கழகத்தவர்கள் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். எந்த இடத்துக்காயினுஞ் சரி, எதற்காக ஆனாலுஞ் சரி, வடநாட்டு ஆதிபத்திபத்தை வளர்க்கும் மத்திய சர்க்கார் மந்திரிமார்கள் எவர் வந்தாலும் சரி!

வருகிறார் என்று தெரிந்ததும் கிளைக் கழகத்தின் கமிட்டியைக் கூட்டுங்கள், அதிருப்தி காட்டும் வகைக்கான செயற் கமிட்டியொன்றை அமைத்துக் கொள்ளுங்கள். "நாங்கள் பகிஷ்காரம் செய்யப் போகிறோம்." என்று போலீசாருக்குத் தெரிவித்து விடுங்கள். "ஏன்?" என்று கேட்கலாம். 'எங்களுக்கு வடவரின் ஆட்சியில் திருப்தியில்லை' என்று தெரிவியுங்கள். 'கூடாது' என்று தடுக்கலாம் அதிகாரிகள். தடையுத்தரவு போடலாம். அதிகாரத்தால் மிரட்டலாம். அடக்குமுறைகளை வீசலாம். அஞ்சவேண்டாம்! தடையை மீறவேண்டிய சூழ்நிலைக்கு ஆளவந்தார் நம்மைக் கொண்டுவந்தால் தயங்கவேண்டாம்! நமது அதிருப்தியைக் காட்டிக்கொள்ளக் கருப்புக்கொடி பிடித்தே தீரத்தான் வேண்டும்!

சட்டம், ஒழுங்கு இவைகளுக்கு நாம் எப்போதும் கட்டுப்பட்டவர்கள். அவைகளைத் துச்சமென நினைப்பவர்களல்ல நாம். ஆகவே, அமைதியான முறையில், ஒழுங்கு தவறாமல் நமது உறுதி தளராமல், எடுத்த செயலை முடித்துக் காட்டுங்கள். வடநாட்டு மந்திரிமார் பகிஷ்காரத்தை நடத்திக் காட்டுங்கள். தடைகளை வீசினால், தயங்கவேண்டாம்! சிறைக்கதவைக் காட்டுவார்கள் — சிந்தாகுலம் கொள்ளவேண்டாம்! செல்லுங்கள், சென்று வாருங்கள்! கருப்புக்கொடி இல்லையென்றால் சிறை! கவனமிருக்கட்டும், தயாராயிருங்கள்!!

### போர்டு அழிப்புப் போராட்டம்

இரயில்வே நிலைய போர்டுகளில்தமிழைத் தாழ்த்தியிருக்கும் அநியாயத்தைக்குறித்து, சென்னையிலே நடைபெற்ற இந்தி எதிர்ப்பு வெற்றிநாள் விழாவிலேயே நான் குறிப்பிட்டேன் — இங்கு பேசிய நமது தோழர்களும் ஆத்திரத்தோடு, ஆவேசக் குரல் எழுப்பினர். அது பற்றியும் நாம் ஒழுங்கான நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாகிவிட்டோம். தலைப்பில், இந்தியில் ஊர்களின் பெயர்களையும், கீழே தமிழில் பெயர்களையும் எழுதியிருக்கும் முறை நம் தாய்மொழியை அவமானப்படுத்துவதாக மட்டுமல்ல — நமது சுயமரியாதைக்கே தீங்கு விளைவிக்கிறது. 'நமக்கு மானமுண்டா?' என்று கேட்பது போலிருக்கிறது. இந்த அநியாயத்தை, அவமானத்தைத் துடைக்கத்தான் வேண்டும் — தாங்கிக்கொண்டிருக்க முடியாது! செயற்குழு இன்று நிறைவேற்றும் தீர்மானத்தை யொட்டி இரயில்வே போர்டாருக்கும், மத்திய ஆளவந்தாருக்கும் 'ஒரு மாத நோட்டீஸ்' தரப்போகிறோம்! தாய்மொழியை அவமதிக்கும் இந்தப் போர்டுகளை மாற்றியமைக்க ஒரு மாதத் தவணை தரப்போகிறோம். ஒரு மாத காலத்திற்குள் இந்தி எழுத்துக்கள் தலைப்பிலிருக்கும் முறை மாற்றப்படாவிட்டால் அதற்கெனக் கிளர்ச்சி துவக்கத்தான் வேண்டும். துவக்கித்தான் தீருவோம், ஆட்சியாளரிடமிருந்து திருப்திகரமான பதில் கிடைக்கவில்லையென்றால்! ஒரு மாத காலத் தவணை — தந்துவிட்டு, பொறுத்துப் பார்ப்போம். பதில் நம் ஆத்திரத்தைக் குறைப்பதாக இல்லாதிருந்தால் அடுத்த மாதம் சிவகெங்கையில் கூடவிருக்கும் மாவட்ட மாநாட்டின்போது செயற்குழு கூடும் நேரத்தில் இதைப்பற்றி ஆலோசித்து, போர்டு அழிப்புப் போராட்டம் குறித்து, முடிவுகட்டியே தீருவோம்!"

# நாட்டுப் பிரிவினையே நம் உயிர்த் திட்டம்

## திராவிடநாட்டுப் பிரஜையாகவே சாவோம்!

## இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?

### கட்டுப்பாடும் பொறுப்பும் நமது கண்ணிமைகள்

### கோவில்பட்டியில் அண்ணாதுரை வேண்டுகோள்

"இரண்டு நாட்களாக வெகு விமரிசையாக நெல்லை மாவட்ட மாநாடு நடந்தது. மாநாட்டில் பங்கு கொள்ளச் சுற்றுவட்டார சிற்றூர்களிலிருந்தெல்லாம் ஏராளமாக வந்திருக்கிறீர்கள் — பரவி வரும் இந்த உணர்ச்சியைப் பயன் படுத்தி நல்லதொரு திட்டம் வகுத்து நாட்டின் நலிவைப் போக்குவோம் என்ற நம்பிக்கையில்! இங்கு பேசிய தோழர்கள் நாட்டில் மோடும் நானாவித பிரச்சினைகளையும் பேசினார்கள். ஆனால் அண்ணா பேசப்போகிறார் என்று அடிக்கடி கூறினார்கள். விஷயங்கள் மிகுதியிருக்கின்றன இன்னும் என்பதல்ல அதன் பொருள், அவர்கள் பேசியவற்றிற்கு என் ஆமோதிப்புப்பெறவே" என்று கோவில்பட்டியில் கூடியிருந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் நடுவே, பலத்த கைதட்டுதலுக்கிடையே, நெல்லை மாவட்ட முதலாவது மாநாட்டில் பேசிய தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது:—

### கட்டுப்பாடு வேண்டும்

கட்டுப்பாடும், ஒழுங்கும் கட்டாயம் நமக்குத் தேவை. இவைசாதாரணவைதான் — ஆனால் இம்மாதிரி சாதாரண விஷயங்களைக்கொண்டுதான் ஒரு சமுகத்தை எடைபோடமுடியும் கட்டுப்பாடின்றி நாம் எப்படிக்காரியமாற்ற முடியும்? நாம் கொண்டுள்ள இலட்சியமோ ஒரு நாட்டினைப் பிரிக்கும் பெரியதொரு திட்டம்-அதற்குக் கட்டுப்பாடின்றி, வீராவேசம் யாற்றினால் மட்டும் போதுமா? திடமுள்ள ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் கண்டு ஆளுவோர் திகைக்கவேண்டும். மாற்றுக்கட்சித் தோழர்களும் அவர்கள் உண்மையிலேயே மறத்தமிழர்கள் என்று உணரவேண்டும். அப்படி நம்மை நாமே அமைத்துக்கொண்டால்தான் நாட்டின் சிக்கல் நல்லமுறையில் தீர்க்க முடியும்.

மாற்றார் மாயாவாதிகள் — எல்லா வித்தையிலும் கைதேர்ந்தவர்கள். அவர்கள் கையாண்ட சூழ்ச்சித்திட்டங்கள் ஒவ்வொன்றையும் எதிர்த்திருக்கிறோம். அவர்கள் தங்கள் செல்வாக்கை இழக்கவில்லை. எந்தெந்த நேரத்தில் எத்தகைய எதிர்ப்பு வருகிறதோ அதற்குத் தகுந்தபடி உருமாறுகிறார்கள்.

அவர்களை எதிர்க்க நம் எண்ணத்தில் வீரம் வேண்டும். அதனைக் காரியத்தில் காட்டும் திறம் தேவை-நம் நாட்டினை மீட்ட இரத்த ஆறு, பிணமலை, எலும்புக்குவியல் எதுவும் வேண்டும். ஆனால், நாமோ இதையெல்லாம் கேட்கவில்லை. அவை அவசியமும் இல்லை. கட்டுப்பாடான உணர்ச்சிஇருந்தால் போதும். இதுவரை சிறு சிறுபிரச்சினைகளில் கலந்துபோராடி வந்திருக்கிறோம். இன்று பேசப்படுகின்ற பிரச்சினைகளோ வெவ்வேறானவை. நாம் இன்று டெல்லியின் பிரஜையாக இருக்கிறோம். ஆனால் நாம் இறக்கும் பொழுது நிச்சயமாகத் திராவிடநாட்டுப் பிரஜையாகவே இறப்போம்!

வடநாட்டினரும் மனிதர்கள் தாம் — மறுக்கவில்லை. இன்னும் சொல்லலாம், தென்னாட்டினரைவிட இன்று சாமர்த்தியமுள்ள மனிதர்கள் எல்லாவகையிலும்! மைனா, வல்லூறு, புறா, சிட்டு எல்லாம் பறவைகள் தான், ஆனால் வல்லூறு, புறாவை விரட்டினால் எல்லாம் பறவைகள் என்று சும்மாயிருந்துவிட முடியுமா? அதுபோலத்தான் வடநாட்டாரும் மனிதர்கள் தான், அவர்களிடம் மனிதப் பண்பு இருக்கும்வரை, மற்றவர்களைச் சுரண்டவேண்டும் என்ற மட்டாக எண்ணம் பரவாதவரை, அடுத்திருப்போரையும் வாழவிடும்வரை!

நம்மை வாடவைப்பவர்கள் எங்கே இருந்தாலும், தேம்ஸ் நதிக்கரையில் உலவினாலும், நைல் நதியோரத்திலே இருந்தாலும் மிஸிஸிபி அருகிலே வலம் வந்தாலும், வோல்கா நதியோரமிருந்தாலும், கங்கைக் கரையினரானாலும் இங்கே ஓடுகிற காவிரி நீர் முழுவதும் செந்நீராக மாறும்வரை போராட உறுதி கொண்டுள்ளார்கள் நம் இனத்தவர் — அவ்வளவு உணர்ச்சி பரவி இருக்கிறது.

### மீட்டாமலே நாதம்!

அழகான வீணை — மீட்டிடும் வசதியில்லாதிருந்தும் நாதம் எழும்புகிறது! நமது கழக உணர்ச்சி பரவியிருக்கிறது மக்களிடம்; அமைப்பு இல்லை, பணபலம் இல்லை, பத்திரிகைத் துணை இல்லை நம்மிடம் — ஆனாலும் உணர்ச்சிநாதம் கேட்கிறது. நாதங்களை எழுப்பும் நாமோ, எதைபெதைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று புரிந்தே எழுப்ப வேண்டும்.

### அங்கேயும் இதே வெறுப்பு!

நிதி அமைச்சர் கோபாலரெட்டியார் நம்நாடு வடநாட்டிற்கு அடிமைப்பட்டிருப்பதைச் சமயம் நேருகிறபொழுதெல்லாம் "ஜாடைமாடையாகச்" சொல்லுகிறார். அவர் அவ்வளவுதான் கூறமுடியும்.

வடநாட்டிலுள்ள எவரிடமும் தென்னாட்டுத்தலைவர்கள் யாருக்கும் சிறிதும் நம்பிக்கையில்லை. அவர்களோ இவர்களை மதிப்பதுமில்லை. ஒரு பொருட்டாக நினைப்பதுமில்லை. பத்திரிகைகளைப் புரட்டிடுங்கள். வடநாட்டிலிருந்து யார் வந்தாலும் இங்கு அமோகமான வரவேற்புக் கொடுக்கப்பட்டதாகச் செய்தி இருக்கும். ஆனால் இங்கே இருந்து போகிற எவருக்காவது டெல்லியிலே வரவேற்பு என்றாவது நடந்ததுண்டா? வடநாட்டுத் தலைவர்கள் பெயரால் இங்கே மண்டபங்கள், சோலைகள், சாலைகள் — ஆனால் கான்பூரிலே காமராஜ் சதுக்கம், ராவல்பிண்டியிலே ராஜகோபாச்சாரியார் மண்டபம், டெல்லியிலே பக்தவக்சலம் பார்க் என்று உண்டா? இல்லை. ஆகவேதான் திராவிட இனவுணர்ச்சி பரவுகிறது! எங்கும் — காங்கிரஸ் வட்டாரத்திலும்! வடநாட்டு ஆதிக்கம், எந்த உருவில் எந்த நேரத்தில் வந்தாலும் எதிர்த்து ஒழிக்கப்படவேண்டும் என்ற உணர்ச்சி காங்கிரஸ்காரர்களிடையே வளர்ந்தே தீரும். கோவில்பட்டிக்கு இன்னும் ஐந்தாண்டு கழித்து வரும்பொழுது காங்கிரஸ் மந்திரியாரையே அழைத்து வருவேன்.

* X *

### இலட்சியப் பாதை

நமது இலட்சியம் வெற்றிபெற, திராவிட நாடு திராவிடருக்காகும் உரிமைப் போராட்டம் நடத்த, மார்க்கம் இரயிலில் தான் இருக்கிறது. இங்கிருக்கும் சூழ்நிலையைக் கவனிக்கும்போது இரயில் மார்க்கம் தான் நல்ல மார்க்கம் என்றுகூடத் தென்படுகிறது. ஏனெனில் மத்திய சர்க்காருக்கு நம்முடைய பணத்தைக்கொட்டத்தட்டப் பத்துக் கோடிக்குமேல் கொண்டுபோய்க் கொடுப்பது இரயில் வருமானம்தான். ஆகவே, நம்முடைய பணம் அங்கு செல்லாமல் தடுக்க வேண்டிய ஒரு போராட்டத்தில் நாம் ஈடுபடவேண்டிய நேரம் ஒருபோது ஏற்பட்டுத் தான் தீரும் — ஏற்படும்படியே நேரும்!

நமது பணம் வீணாக இந்திய சர்க்காருக்குச் செல்வதைத் தடுத்தால்தான் நமது அதிருப்தி அவர்களுக்கு விளங்கும். அமெரிக்கர், சுதந்திரம் பெற "உரிமை இல்லை; ஆகவே வரி கொடோம்" என்ற முழக்கமிட்டே வெற்றி பெற்றனர். இந்த முழக்கம், நம்மிடையேயும் உருவெடுக்கும். உருவெடுத்தால், நமது இலட்சிய வெற்றிவரை நாம் போராடித்தான் தீருவோம். விரைவில் நமது கழக மாகாண மாநாடு கூடவி

# நம்மிடம் தீவிரத் திட்டங்கள் உண்டு, ஏராளம்!

அதற்குப் பிறகு இக்கவரி தடுப்பு இயக்கம் ஆரம்பிக்கும் ஆலோசனையில் ஈடுபட்டே தீருவோம். வரி தடுப்பு இயக்கத்தால் மத்திய சர்க்கார் நமது அதிருப்தியின் உருவையும், இலட்சியத்தின் பொருளையும் அறியத்தான் போகிறது. அத்தகைய வரி தடுப்பு இயக்கத்தில் ஈடுபட்டால், மாகாணங்களிலிருந்து மத்திய சர்க்காருக்குச் செல்லும் வரிகள் தடுக்கப்படவேண்டுவது, முக்கியமானதாகலாம். அப்படி யோசித்துப் பார்த்தோமேயானால் மாகாணங்களிலிருந்து மத்தியசர்க்காருக்கு வருமானம் தருபவைகளாக இருப்பவை வருமான வரி (Income tax)யும் கலால் வரி Excise tax)யும் தான். வருமானவரி செல்லாமல் தடுக்க நம்மால் முடியாது! ஏனெனில் வருமான வரி செலுத்தக்கூடிய அளவில் நமது கழகத்தில் பெரும் பணக்காரர்கள் கிடையாது! ஆகவே, பணக்காரர்கள் செலுத்தும் வரியைத் தடுப்பது நம்மால் முடியாது — பலிக்காது! அதேபோலத் தான் தீப்பெட்டி, தேயிலை, காபி முதலாய பொருள்களிலிருந்து மத்திய சர்க்காருக்குச் செலுத்தும் வரியும்! ஏனெனில் அவைகள்மீது நேரடியாக வரி வசூலிப்பதில்லை. வாங்குபவர்களிடமிருந்தே இந்த வரி வசூலிக்கப்பட்டு, மத்திய சர்க்காருக்குச் செல்கிறது. நமது மாகாணத்திலிருந்து செல்லும் முக்கிய வருமானம் இரயில்வே வருமானம்தான். எனவே, இந்த வருமானம் அங்கு செல்லாத வழியில் நமது கிளர்ச்சியைத் துவங்க நேர்ந்தாலும் நேரலாம்.

## டிக்கெட், இல்லாப் பிரயாணம்!

கூடுமான வரையில் இரயிலில் ஏறமாட்டோம்—ஏறினால் டிக்கெட் வாங்கமாட்டோம்! 'டிக்கட் எங்கே?—இரயில்வே அதிகாரி கேட்பார், நம்மை. 'நான் கொடுக்கும் பணம் டெல்லி 'சர்க்காருக்குப் போகிறது. டெல்லி சர்க்கார் ஆட்சி எனக்குத் திருப்தியில்லை. ஆகவே நான் வாங்கவில்லை"—இப்படி நாம் பதில் தருவோம். கோர்ட்டுக்குக் கொண்டு செல்வார்கள்-அபராதம் கட்டச் சொல்லலாம்! கட்ட முடியாது என்றால் ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் வரை சிறைவாசம் கிடைக்கலாம்! இல்லையென்று கட்டினோம் என்றாலும் அதனால் நாம் அபராதமாகக் கட்டும் தொகை பணமில்லையென்று சஞ்சலப்படும் மாகாண சர்க்காருக்கு, குமாரசாமி ராஜா சர்க்காருக்குத் தானே போய்ச் சேரப்போகிறது! அங்கு போவதைவிட இங்கு செல்வதில் நமக்குத் திருப்திதான்.

இந்தக் கிளர்ச்சி துவக்கப்பட்டால் இரயில்வே ஸ்டேஷன்களைப் போலீஸ் ஸ்டேஷன்களாக்கிமிரட்டலாம் — சர்க்கார். ஆனால் ஆயிரக் கணக்கில் பொது மக்கள் டிக்கெட் வாங்காத் திட்டத்தைக் கைக்கொண்டால் கலங்காமற் போகாது இந்திய ஆட்சி—நமது கோரிக்கையை அறியாமலிருந்துவிட முடியாது—அலட்சியப்படுத்திடவும் முடியாது வடநாட்டு ஆட்சியால்!

## நியாயமே நமது அடிப்படை

நமது கோரிக்கை நியாயமானது; எவரும் தடுக்க முடியாதது. நமக்கென ஒரு நாட்டோடு வாழ்ந்தவர்தான் நாம், தனிக் கலையும் பண்பாடும் நிரம்பிக் கிடந்தோர்தாம் நாம். நாம் ஆண்ட பரம்பரையினர்-ஆனால் வடவரோ அன்று முதல் ஏமாற்றுவதிலே திறமையுள்ளவர்கள்!

## தராசும் பஞ்சாங்கமும்!

நமது நாடு இன்று சீரழிந்து கிடப்பதற்கே காரணம், தராசும் பஞ்சாங்கக்கட்டும் தான்—இன்னும் சிறிது நன்றாகச் சொன்னால் டெலிபோனும் பஞ்சாங்கமும்தான்! அதாவது புரோகிதனும் வடநாட்டு முதலாளித்துவமும்தான். டெலிபோன், இன்றைய வியாபாரத்தைப் பேச்சுமூலமே முடித்துத்தரும் கருவி. நம்மை வடநாட்டு வணிக முதலாளித்துவம் சுரண்டி வருகிறது. மில்வேஷ்டிக்கு ஷோலாபூர், சேலைகள் என்றால் ஆமதாபாத், சிமெட்டி வேண்டுமென்றால் டால்மியா, ஆணிக்கு டாடா—எல்லாம் அங்கிருந்து! வானை முட்டும் தொழிற்சாலைகள் வடநாட்டில்! இன்றுள்ள வடநாட்டு முதலாளிகளால் இந்தியாவையே குத்தகைக்கு எடுத்துவிட முடியும். அவ்வளவு தூரம் தொழில் முதலாளித்துவம் வட நாட்டில் வளர்ந்திருக்கிறது. ஆனால், நாமோ சுரண்டப்படுபவர்களாக இருக்கிறோம். நமது பிரதேசத்தில் தொழிற்சாலைகள் பெருகவில்லை—தொழில்வளம் இல்லை. இந்த இக்கட்டான நிலையில் புதிதாகத் தொழிற்சாலைகள் ஏற்பட்டாலும் அவைகள் நிலைப்பதற்கான பாதுகாப்புக் கிடைக்கும் வழியில்லை. புது இந்திய அரசியல் அமைப்பில் அதற்கான அம்சமில்லை!

## மார்வாடிக் கடை, மறியல்!

ஆகவே, பொருளாதாரத் துறையில் நம்மைச் சுரண்டும் வடநாட்டு வணிகர்களை எதிர்த்தும் நாம் போராட வேண்டும்—போராடப் போகிறோம்! இங்கிருந்து, வியாபாரம் நடத்திப் பொருள்களைக் கொண்டுசெல்லும் வடநாட்டு மார்வாடிக் கடைகள்முன் மறியல் நடத்தத்தான் வேண்டும். ஆனால் உடனடியாக, இன்றே, இதைத் துவக்கும் சூழ்நிலை இல்லை. மாகாண மாநாடு முடிந்ததும் இதுபற்றியும் முடிவு கட்டத்தான் போகிறோம்.

## வடநாட்டுத் துணி பகிஷ்காரம்

இன்னும் கூறவேண்டுமானால், நம் நாட்டுக் கைத்தறித் துணிகளை ஆதரித்து வடநாடு மில் துணிகளைப் பகிஷ்காரம் செய்யவேண்டும் என்ற நடவடிக்கையைக்கூட நாம் மேற்கொள்ள நேரும். நம் நாட்டுப் பொருள்களை ஆதரியுங்கள் என்று கூட நாம் சொல்லலாம். வெள்ளையன் எப்படி ஓடினான்? இங்கிருந்து பொருள்களைக் கொண்டு சென்று சிப்பாகவும் சோப்பாகவும் திருப்பியனுப்பி நம் நாட்டிலிருந்து தங்கக்கட்டிகளைக் கொண்டு சென்றான்—வியாபாரச்சுரண்டல் மூலம். இதை எதிர்த்து அன்று காங்கிரசார் சுதேசி இயக்கம் நடத்தினர்—அந்நியப் பொருள் பகிஷ்காரம் செய்தனர். திமிர்கொண்டு கிடந்த வெள்ளையரின் கண் திறந்தது! அதேபோல, வடநாட்டு ஏகாதிபத்யத்தை, முதலாளித்துவத்தை, பகிஷ்காரம் என்ற திறவுகோல்மூலம், கண் திறக்கச் செய்யமுடியும்.

## அடக்குமுறை

இந்த ஆளவந்தார் நம்மீது வீசும் அடக்குமுறைகளை எதிர்த்து அறப்போர் நடத்தவேண்டும் என்று துடிக்கின்றனர், நம்மவர்கள்.

ஆசைத்தம்பிமீது பாய்ந்தது சர்க்கார். அவரது தலை மொட்டை யடிக்கப்பட்டது. கையிலே விலங்கிட்டு இழுத்துச் சென்றனராம். இந்த நெஞ்சு கொதிக்கும் நிகழ்ச்சியை மக்களுக்குத் தெரியும் வகையில், சுவர்களில் காட்சி தரும்படி செய்யலாமே, நமது தோழர்கள்! அது மட்டுமா, தடை செய்யப்பட்ட நூல்களிலுள்ள பகுதிகளை மக்களிடை பரப்ப நம்மிடை காகிதமும், எழுதப் பேனாவும், இல்லாமலா போய்விட்டன!

அச்சிட்டால் தவறு என்று பாய்கின்றனர், ஆளவந்தார். ஆனால், எழுதித்தந்தால்? தவறு என்று பிடித்துச் சென்று சிறைக்குள் தள்ளட்டுமே!

"இரணியன்" நாடகம் தடைப்படுத்தப்பட்டது. அதை மீறினால், சட்டம் பாயும் என்பது நமக்குத் தெரியும். உரிமைக்குப்போராட விரும்பும் வீரர்கள் எல்லாம், "இரணியன்"மீது கவனத்தைச் செலுத்தலாமே!

மாகாண மாநாடு முடிவதற்குள் இந்தக் கிளர்ச்சிகளை ஆங்காங்குள்ளோர் செய்யட்டும், இதெற்கெல்லாம் அனுமதியா கேட்டுக் கொண்டிருப்பது? ஆளவந்தாரின் அடக்குமுறை கண்டு அங்கம் கொதிப்போரே! செயலாற்றுங்கள், புறப்படுங்கள்! போராட்டத்திலே, வீரம் இருக்கட்டும் —வீம்பு வேண்டாம். ஆர்வம் நிறையட்டும் — அருவருக்கத் தக்க முறைகள் விலகட்டும். அனைவரையும் திரட்டுங்கள் — வீண் பிரதாபத்தை விலக்குங்கள். கட்டுப் பாட்டோடு இருங்கள் — கல் பொம்மைகளாக இருக்கவேண்டாம்! காரிய மாற்றவேண்டும் என்று துடித்துக்கேட்கும்எனது தம்பிமார்களை காணப் பூரித்துப் போகிறேன் நாட்டவர் நம்மிடம் வைத்திருக்கும் நம்பிக்கையைக்காணும்போது, மகிழ்ச்சி என் இதயத்தில் கொந்தளிக்கிறது. நாட்டில் நமது கழகத்துக்கு ஏற்பட்டிருக்கும் செல்வாக்கையும், அதை உருவாக்கும் வீரத்தம்பிகளையும் காணும்போது "இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?" என்ற வெற்றிவாசகத்தையே நினைவூட்டிக்கொள்கிறேன். சர்க்காரையே கேட்கிறேன், 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்? "எல்லோரையுமே கேட்கிறேன் "இப்படைத் தோற்கின் எப்படை ஜெயிக்கும்?" என்னை நானே கேட்டுக் கொள்ளுகிறேன், இப்படைத் தோற்கின் எப்படை ஜெயிக்கும்!

நயவஞ்சக நரிக்கு—ஒரு புதர்!
பாம்புக்கு—ஒரு புற்று!
புலிக்கு—ஒரு குகை!
நமக்கு—ஒரு நாடு!

இதைப் பெறப் போராடுவோம் — எஃகுக் கம்பிகளே, இதயங்கலங்காச் சூரர்களே, எனது தம்பிமார்களே, சிறு சிறு கிளர்ச்சிகள்மூலம் அனுபவம் பெறுவோம்! இவைகளின் வெற்றிகள் நமது இலட்சியப் போருக்கு அடியெடுத்துக் கொடுக்கட்டும்! வீர உணர்ச்சி வளரட்டும்! வெற்றி பெறுவாரீர்!!" என்று கூறி முடித்தார்.

(நமது நிருபர்)

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று தகுதி திறமை பேசிடும் தருக்கர் இனத்தினரைப் போட்டியில் வெல்கிற அளவு என்று எக்காளமிட்டார். மேலும் பேசுகையில் அவர் கூறியதாவது, கோவிலில் இருக்கும் சிற்பங்களைச் செதுக்கியவர்கள், அஜந்தா எல்லோரா கலைஞர்கள், சித்தன்னவாசல் ஓவியர்கள், தஞ்சை பெரிய கோவிலின் கோபுர நிழல் கீழே விழாமல் கட்டிய ஆற்றல் படைத்தவர் அத்தனை பேரும்யார்? திராவிடர்தாமே! ஆற்றல் பெற்ற இனம் என்று ஆர்ப்பரிக்கிறது இவர்கள் தூசிக்குக்கூடச் சமமாகாத கபோதிகளைப் பெற்ற அந்த இனம்!

இந்தப் பிரச்சினையில் கட்சித் திராவிடர்களையும் ஒன்று சேர்த்திருக்கிறது. எந்தக் கூட்டம் சாதிமுறையை அமைத்து திராவிட இனமக்களை வெவ்வேறாகப் பிரித்துத் தனியாக்கியதோ அதே கூட்டம் அதே முறையால் பிரிந்திருந்த திராவிடர்களை ஒன்று சேர்த்துவிட்டது.

## பட்டினிக் கதை

அடுத்தது இப்போது நம்மை நாடிவந்து சூழ்ந்துகொண்டிருக்கும் பஞ்சம். மாவட்டங்கள் பலவற்றில் பஞ்சம் — பட்டினி — அதனாலே சாவு — நேரு சொல்கிறார் பஞ்சம் என்று சொல்வது அபத்தம் என்று. அகில உலக அரசியலில் ஒரு அங்கம் வகிக்கப் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கும் நேருவுக்கு நாட்டுப்பஞ்சம் எப்படித் தெரியும்? அதைப்பற்றி எங்கே கவலைப்படபோகிறார். ஆனால் ஒன்றுமட்டும் சொல்கிறோம், பசியும் பட்டினியுந்தான் பாராண்ட மன்னர்களைக் குருதி வெள்ளத்தில் மிதக்கச் செய்திருக்கிறது என்பதை நேரு மறக்காமல்மட்டும் இருக்கட்டும்!

சென்னை மாகாண உணவு மந்திரி திரு. ரோச் விக்டோரியா பஞ்சம் என்று பதைக்கிறார். இந்தியப் பிரதமர் நேரு பஞ்சம் என்றுசொல்வது அபத்தம் என்கிறார். பஞ்சாப் அகதிகளை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று உத்தரவிட்டதை ஏற்று நடத்திய சென்னை சர்க்காரின் வேண்டுகோளை மறுத்ததுகூட அல்ல — மடமை என்று ஒதுக்கித் தள்ளிவிட்டது மத்திய சர்க்கார்.

## காட்டு விழா நாட்டில்

மரம் நடுவிழா நடத்தினார்கள். வனமகோற்சவம், அதற்கு நேரடியான தமிழ் அர்த்தம் காட்டுத்திருவிழா, ஆனால் கொண்டாடவேண்டியது காட்டில் அல்ல நாட்டில்! மக்களை மிருகங்களைப் போல வேட்டையாடும் சர்க்கார் நாட்டைக்காடாக நினைத்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை' மூலைக்கு ஒரு மரமாக வைத்துவிட்டு அதைக் காடு என்று நம்மை நம்பச் சொல்லுகிறார்கள். நம்புவதற்கு மக்கள் காத்திருப்பதுதான் அதிலே உள்ள ஆச்சரியம்.

## கொடுத்தவர்கள், நாம்

இவ்வளவு சிக்கலான சூழ்நிலையில் நாம் கூடியிருக்கிறோம். நாம் என்றால் அதில் ஆழ்ந்த கருத்திருக்கிறது. மற்ற அரசியல் கட்சிக்காரர்கள் அத்தனை பேரும் மக்களிடம் பேரம் பேசுகிறவர்கள். நிதி தாருங்கள்—அங்கத்தினராகுங்கள்—வோட்டுப் போடுங்கள் — மந்திரிகளாக்குங்கள் என்று! மக்களிடம் எப்போதும் கையேந்தி நிற்பவர்கள். ஆனால் நாம் மக்களிடம் பெற்றதைவிட கொடுத்ததுதான் அதிகம். தமிழுக்குப் புத்துயிரளித்தோம். தமிழ் நாட்டைச் சீர்திருத்தினோம். தமிழர் வாழ்வைப் பண்படுத்தினோம். கலை உலகுக்கு, இலக்கிய உலகுக்கு, இசை உலகுக்கு, கவிதை உலகுக்கு, சினிமா உலகுக்கு, நாடக உலகுக்கு, நகைச்சுவை உலகுக்கு, ஈடற்ற மாணிக்கங்கள் பலரைத் தந்துதவினோம். மற்ற கட்சிக்காரர்கள் மக்களிடம் கேட்டுக்கொண்டேயிருப்பவர்கள். நாம் மக்களுக்குக் கொடுத்துக்கொண்டேயிருப்பவர்கள். ஆகையினால்தான் நாம் என்பதில் ஒரு பெருமையும் களிப்பும் நம்மை அறியாமலே ஏற்படுகிறது.

இந்த இக்கட்டான நிலையில் இங்கே கூடியிருக்கிற நாம் நல்ல திட்டங்களை வகுத்து தீர்மானங்களை நிறைவேற்றி நாட்டிற்கொரு நல்வாழ்வு தரவேண்டும்—அதைத்தான் நாடு எதிர்பார்க்கிறது—நல்லவர்களும் நம்மிடம் இருக்கிறது என்று நம்புகிறார்கள். நாமும் அதைத்தான் செய்யவும் போகிறோம் என்று கூறி, மாநாட்டின் திறப்புரை செய்ய அழைத்த மாநாட்டினருக்கு நன்றி கூறினர்.

*

# கருப்புக் கொடி காட்டுங்கள்!

★ திராவிட நாடு திராவிடருக்கே என்பது நமது இதய கீதம் - உரிமை முழக்கம்.

இதைக் காட்டுக்கூச்சல் என்று அவர்கள் கேலி செய்கிறார்கள்.

★ திராவிடம், நமது நாடு - முன்னாளில் தனி யாட்சியுடன் இருந்த நாடு.

இதை அடிமைக் காடாக்கிவிட்டார்கள் அவர்கள்.

★ திராவிட நாடு, இயற்கை வளம் மிகுந்த நாடு.

இதை, வடநாட்டுச் சரக்குக்குச் சந்தையாக்கிவிட்டார்கள் அவர்கள்.

★ திராவிட நாடு, ஜாதி, மத, பேதம் எனும் பித்துப் பிள்ளை விளையாட்டு இல்லாததாக இருந்தது - அன்று.

இன்று, திராவிடத்தை, ஜாதி மத வெறியரின் வேட்டைக் காடு ஆக்கிவிட்டார்கள் அவர்கள்.

★ திராவிட நாடு, பஞ்சமும் பட்டினியும் பசியும் அறியாதிருந்த நாடு.

இங்கு இன்று பருத்திக்கொட்டை, புளியங்கொட்டை, கத்தாழைக் கிழங்கு ஆகியவைகளைத் தின்று மக்கள் மடியும் பஞ்சக் காடு ஆக்கிவிட்டார்கள் அவர்கள்.

★ திராவிடத்தின் புகழ் தரணி முழுவதும் பரவி இருந்தது - முன்பு.

இன்று, திராவிடத்தின் 'தலைவிதி' டில்லியில் எழுதப்படுகிறது!

★ திராவிடம் திக்கெட்டும் முன்பு தூதர்களை அனுப்பி வந்தது.

இன்று, மந்திரிகள், காவடி எடுக்கிறார்கள் டில்லிக்கு.

**திராவிடம் தேய்கிறது!**

**தன்மானம் அழிகிறது!**

வீரத் திராவிட மக்களே! விடுதலை வேண்டாமா? பிறப்புரிமையைப் பெற வேண்டாமா? திராவிட நாடு திராவிடருக்கு ஆக வேண்டாமா?

ஆம்! என்கிறீர்கள் அல்லவா!
சரி! எங்கே உங்கள் வீரம்?
காட்டுங்கள் செயலில்!
காட்டுங்கள் கருப்புக் கொடி!

அவர்கள் காணட்டும் கருப்புக் கொடிகளை – எங்கும்! ஆயிரக் கணக்கில்!!

ஆதிக்கக்காரர்கள் அறியட்டும்
திராவிடத்தின் விழிப்புணர்ச்சியை
**கருப்புக் கொடி காட்டுங்கள்!**

எதேச்சாதிகாரிகளின் எண்ணத்தில் மண் விழ
**கருப்புக் கொடி பிடியுங்கள்!**

திராவிடத்தை வாழவைப்போம்
என்ற சூளுரையை விளக்க
**கருப்புக்கொடி பிடியுங்கள்!**

திராவிடம் ஆரிய வேட்டைக் காடாக
இருக்கச் சம்மதியோம் என்று விளக்க
**கருப்புக் கொடி காட்டுங்கள்!**

உரிமை உணர்ச்சியை
உலகறியச் செய்ய
**கருப்புக் கொடி காட்டுங்கள்**

திராவிட நாடு திராவிடருக்கே
என்ற திட்டம் வெற்றிபெற
**கருப்புக் கொடி காட்டுங்கள்**

ஆதிக்கக்காரர்களிடமிருந்து
திராவிடத்தை விடுவிக்க
அறப்போர் தொடுத்துவிட்டோம்
என்பதை அறிவிக்க
**கருப்புக் கொடி காட்டுங்கள்**

அவர்கள் பவனி வருகிறார்கள்
அவ்வப்போது—
அவர்கள் காணட்டும்
திராவிடரின் தீர்ப்பை!
**காட்டுங்கள் கருப்புக் கொடி!**

மத்திய சர்க்கார் மந்திரிகள்
உங்கள் ஊர்களுக்கு வருகிறபோது
**கருப்புக் கொடிகள்! கருப்புக் கொடிகள்!**

நமது இதயத் துடிப்பை எடுத்துக் காட்ட,
எண்ணற்ற
**கருப்புக் கொடிகள்!!**
தயாராக இருங்கள்
**கருப்புக் கொடி காட்ட!**

திராவிடத்தை ஆட்டிப் படைக்கும்
மத்திய மந்திரிகள் வருகிற திக்கு நோக்கி
அணி அணியாகச் சென்று,
**கருப்புக் கொடி காட்டுங்கள்**

★ கருப்புக் கொடி காட்டுவது அதிருப்தியைத் தெரிவிக்க!

★ இந்த உரிமை நமக்கு உண்டு!

★ எந்த நாகரீக சர்க்காரும் இதைத் தடுப்பதில்லை

எனவே

**காட்டுங்கள் கருப்புக் கொடி**

பலாத்காரம் துளியுமின்றி,
அமைதி கெடாத முறையில்,
ஆனால்,
ஆர்வத்தோடு,
உறுதியோடு,

## மத்திய சர்க்கார் மந்திரிகளுக்கு

# காட்டுங்கள் கருப்புக் கொடி!

# குமுறும் எரிமலையின் காட்சி!

நாடெங்கும் முன்னேற்றக் கழகத்தோழர்கள் நம்மினத்தின் வாழ்வின் வழியாக உள்ள சமுக நீதியைச் சதிகாரர்கள் ஒழித்திடத்திட்டமிட்டு வேலை செய்வதை எதிர்த்து அங்காங்கே, தங்கள் எதிர்ப்பைக் காட்டியிருக்கின்றனர், பிறகட்சியினர் கூட்டுறவோடு. அது குறித்து வந்து குவிந்திருக்கும் செய்திகளின் தொடர்ச்சி:—

### பெற்றோர் கேட்கின்றனர்.

பாக்காலாவில் 14—8—50-ல் பெற்றோர் தமிழ்ச் சங்க ஆதரவில், ஆர்க்காடு புலவர், மணிஎழிலன் தலைமையில் நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேவை, அது இன்னும் பல ஆண்டுகள் நீடித்திருக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### சின்னளப்பட்டியில்

14—8—50ல், சின்னளப்பட்டித் திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை சார்பில் காலை 10 மணிக்கு ஒரு ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய தெருக்களின் வழியாகச் சென்று கடைசியில் கடைத் தெருவில் வந்து முடிந்தது. புகைப்படம் எடுக்கப்பட்டது. உள்ளூர் தேவாங்கர் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

அன்று மாலை 6 மணிக்கு அழகிரிசாமி தலைமையில் மேட்டுப்பட்டி காந்தி சேவா சங்கத்தின் முன்பாக நடந்த பொதுக் கூட்டத்தில் சேதுபதி, மூர்த்தி, மதிசூதனன், தனியரசு, காந்தி கிராம ப. சீத்தாராம அய்யர், மாணவத் தோழர்கள் கிருஷ்ணசாமி, ராமா முதலியோர் பேசினர். கம்யூனல் ஜீ. ஓ. வை ஆதரித்தும் இன்னும் இந்தி ஒழிந்தது பற்றியும், வேறு பல உள்ளூர் பிரச்சினைகளைப் பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கத்தோலிக்கர் கோரிக்கை

பொன்மலையில் 10—8—50 அன்று எம். எஸ். ஆரோக்கியசாமி தலைமையில் நடந்த கத்தோலிக் இந்தியர் சங்கக் கூட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள் உட்படப் பெருவாரியான பிராமணரல்லாத மக்களுக்கு ஆதரவாக இருந்து வரும் கம்யூனல் ஜீ. ஓ. வை சென்னை சர்க்கார் வழக்கம்போல் அமுல் நடத்தவேண்டுமென்றும், இதற்கு எதிராக இந்திய சட்டம் இருக்குமானல் அதனையும் திருத்தியமைக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### செயங்கொண்டத்தில்

14—8—50 அன்று செயங்கொண்டம் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் கட்சி வேறுபாடின்றி, பகல் 2-15 மணிக்குமேல் பள்ளி வாயிலிலிருந்து "சென்னை அரசாங்கமே. கம்யூனல் ஜீ ஓ. வைக் காப்பாற்று" "வகுப்பு நீதி வழங்கத் தயங்காதே" என்ற முழக்கங்களுடன் வரி வரியாகக் கிளம்பினர். ஊரின் பிரதான பகுதிகளிலெல்லாம் சுற்றி வந்தனர். மாணவர்களை ஆசிரியர்கள் சிலர் வேண்டியும், தாங்கள் பள்ளி செல்ல மறுப்பதற்குத் தக்க விடைகள் கூறினர். மாணவத் தோழர்கள் ஆ. இராமசாமி, சு. நாகராசு, பாலகிருட்டினன் ஆகியோர் முன்நின்று மறியலை நடத்தினர்.

### தமிழர் கழகத்தில்

13—8—50 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு ஆற்காடு குப்பம் கிராமத்தில் நடந்திய மறைமலையடிகளார், கவிமணி தேசிவினயகம் நினைவு நாள் கொண்டாட்டத்தின் பொழுது! ரஷீத் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், நன்னன், ஆடலரசு, பதுமநாபன் ஆகியோர் பேசினர். தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நலனைக் கருதி சென்னை அரசாங்கத்தினர் வகுப்புவாரி உரிமைத் திட்டம் இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவதை முழு மனதோடு ஆதரிக்கிறோம் என்றும் இன்னும் பல உள்ளூர்ப் பிரச்சினைகளைப் பற்றிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### சுதந்திரத் திருநாளில்!

15—8—50 நாள் மாலை 4 மணியளவில் ஆசிரியர் என். இராமசாமி தலைமையில் நடந்த சுதந்திரத் திருநாள் கொண்டாட்டப் பொதுக் கூட்டத்தில் மாணவத் தோழர் திருவேங்கடம் பிற்போக்கு வகுப்பார் முன்னேற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அவசியம் எனக்கொண்டு வந்த தீர்மானம் பெருத்த ஆரவாரக் கைதட்டுதலோடு நிறைவேற்றப்பட்டது.

### காங்கேயம் கேட்கிறது!

16—8—50 அன்று மாலை 6 மணிக்கு ரேடியோ மைதானத்தில், தி. மு. க. சார்பில், ஈரோடு எஸ். அப்பாவு தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஈ. வே. கி. சம்பத் பேசினர். அவர் பேசுகையில், இன்று நம் நாட்டு மக்களின் கவனத்தை முழுக்க முழுக்க இழுத்திருக்கும் பரபரப்பான சேதி, வகுப்பு நீதிக்கு ஏற்பட்ட ஆபத்துதான்! வகுப்புநீதி இல்லையானல், பிற்படுத்தப்பட்ட திராவிட சமுதாயம் அழிந்துபடும் என்று குறிப்பிட்டார். மேலும் இன்றைய அரசியல் குறித்து நீண்டநேரம் பேசினர். இந்திய அரசியல் சட்டத்தை மாற்றியமைக்கவும், இந்தி ஒழிந்ததைக் குறித்து மகிழ்ச்சியைத் தெரிவிக்கவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மாயவரத்தில் ஆதரவு!

மாயவரம் கூறைநாடு கடைவீதியில், தி. மு. க. சார்பில் சாமிநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் வை. மாணிக்கம், வி. ஏ. பாண்டியன், ஈ. வே. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், திராவிடரின் நல்வாழ்விற்கேற்ற சாதனம் என்பதை மக்கள் உணர்ந்திட நடத்தப்பட்ட ஆதரவுக் கூட்டத்திற்கு ஏராளமான மாணவர்களும், பெரியோர்களும் வந்திருந்தனர்.

அன்று காலை 9½ மணிக்கு, ஒரு சைக்கில் ஊர்வலம், ஜோசப் தலைமையில் கிளம்பி ஊரின் முக்கிய வழியாக வந்து கழகக் கட்டிடத்தோடு முடிந்தது.

### பம்பாயிலும்!

18—8—50 வெள்ளிக்கிழமை இரவு 8-மணிக்கு நடந்த பம்பாய் தென்னிந்திய இல்லத்தார் சங்கச் செயற்குழுக் கூட்டத்தில், வகுப்பு நீதி வேண்டியும், அதனை ரத்து செய்ய உதவி செய்யும் இந்திய சட்டத்தைத் திருத்தவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பல கட்சித் தோழர்கள்

19—8—50ல் நடந்த சேத்துப்பட்டு வ. உ. சி. இளைஞர் கழக இரண்டாம் ஆண்டு விழா அன்பு—கணபதி தலைமையில் நடந்தது. சா. சு. மணி வரவேற்புரை வழங்கினர். எம். கன்னியப்பன் எம். எல். ஏ. பேசுகையில் வகுப்புரிமைக் கிளர்ச்சியில் கட்சி வேறுபாடின்றி கலந்து பணியாற்ற வேண்டும், என்றும், பொது நன்மைக்குப் பாடுபடும்போது மற்றவர்களின் விருப்பு, வெறுப்பைக் கவனிக்காது, நீதிக்காகப் போராடுகிறோம் என்ற திடமனதுடன் உழைக்கவேண்டும், ஏனெனில் சமூக நீதி ஒழிந்தால் தமிழர் சமுதாயம் அழிந்தது என்றே அர்த்தம் என்று குறிப்பிட்டார். 'காண்டீபம்' ஆசிரியர் மாரிசாமி பேசும் பொழுது, "நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை எல்லாம் வெளியிடுவதுதான் பத்திரிகா தருமம், வகுப்புவாரி உத்தரவு பற்றிய பெருங் கிளர்ச்சியை சில பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்து வருகின்றன. இது வருந்தத்தக்கது. 100-க்கு 97 பேர்களாக உள்ள நாம் எவ்வளவு பின்னணியிலுள்ளோம் என்பதைக் கடந்த காலப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. உரிமை பெற ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இறுதியாகப் பேசிய க. அன்பழகன் வகுப்பு நீதி வழங்கும் முறையில் திராவிட இயக்கம் செய்த தொண்டுகளை விரிவாக எடுத்து விளக்கினர். வகுப்பு நீதி வழங்க எடுக்கவேண்டிய முயற்சிகளைப் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்

(அடுத்த பக்கத்தில்)


புதிய வெளியீடு

"அண்ணாவின் ஆறு கதைகள்" ரூ. 1 0 0

✲

மற்றும்

| | | | |
|---|---|---|---|
| ரோமாபுரி ராணிகள் | 2 | 4 | 0 |
| கம்பரசம் | 1 | 8 | 0 |
| அறப்போர் | 1 | 0 | 0 |
| 1858—1948 | 1 | 0 | 0 |
| குமரிக்கோட்டம் | 1 | 0 | 0 |
| கற்பனைச் சித்திரம் | 1 | 0 | 0 |
| சிறு கதைகள் | 1 | 0 | 0 |
| ஆரியமாயை | 1 | 0 | 0 |
| உலகப் பெரியார் | 1 | 0 | 0 |
| ஜமீன்—இனம் ஒழிப்பு | 1 | 0 | 0 |
| பணத் தோட்டம் | 1 | 0 | 0 |
| தீ பரவட்டும் | 1 | 0 | 0 |
| வர்ணாஸ்ரமம் | 0 | 12 | 0 |
| ரேடியோவில் அண்ணா | 0 | 12 | 0 |
| நிலையும் நினைப்பும் | 0 | 12 | 0 |
| தாழ்ந்த தமிழகம் | 0 | 8 | 0 |
| மே தினம் | 0 | 5 | 0 |
| மொழிப் போராட்டம் | 1 | 0 | 0 |

(இரா. நெடுஞ்செழியன்)

கிடைக்கும் இடம்:—

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் P. O.

திருச்சிராப்பள்ளி

(AD)


## பிரிவினை வாரம் கொண்டாடுக!

## இயக்க முன்னணி வீரர்கள் கூடினர்

### பிரச்சாரக் குழுக் கூட்ட விவரம்

கோவில்பட்டியில் 27—8—50 ஞாயிறு பிற்பகல் 2-மணியளவில், தோழர் வள்ளிமுத்து மண்டியில் பிரச்சாரக் குழுச்செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் பிரச்சாரக் குழுவினர் கூடினர். கூட்டத்திற்கு கே. ஏ. மதியழகன், இரே. இளம்வழுதி, டி. கே. சீனிவாசன், அரங்கண்ணல், என். வி. நடராசன், என். எஸ். இளங்கோ, பொன்மலை பராங்குசம், ஈழத்தடிகள், கண்ணதாசன், மு. கருணாநிதி, காஞ்சி-கல்யாணசுந்தரம், தில்லை. வில்லாளன், எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம் ஆகியோர் வந்திருந்தனர். இன்னும் பல இயக்கத் தோழர்களும் கூட்டத்தின் நடவடிக்கைகளைக் காணக் குழுமியிருந்தனர்.

தலைவர் இவ்வாண்டு பிரசாரக்குழு செய்த வேலைகளைக் குறித்துப் பேசினர், சிறிதுநேரம் — பிறகு, பிரச்சாரக்குழுவின் எதிர்கால அமைப்பு முறைகளைப்பற்றி விவாதம் நடந்தது.

இறுதியில் திராவிட முன்னேற்றக் கழகந் தொடங்கி ஓராண்டு முடியப் போகிறது. ஆகவே செப்டம்பர் 17-ந் தேதி முதல் ஒரு வாரம் முழுவதும் பிரிவினை வாரம் என்ற பெயரால் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டு, அதற்காகத் நாயகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் பிரசாரகர்களை அனுப்பத் திட்டமிட்டு செயலாளர் இறுதி அறிக்கை வெளியிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதோடு பிரசாரக் குழுக் கூட்டம் இனிது முடிந்தது.

✲

# நெல்லை மாநாட்டுத் தீர்மானங்கள்

1. சேலம் கல்லூரித் தலைவர் திரு இராமசாமி அவர்கள் மறைவிற்கும், சினிமா உலகில் புகழுடன் உலவிய காளி. என். இரத்தினம் அவர்கள் மறைவிற்கும் வருந்துவதுடன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது இம்மாநாடு.

2. தீப்பெட்டித் தொழிலுக்கு அரசியலார் தக்க பாதுகாப்பு கொடுப்பதற்காக தீப்பெட்டி அட்வைசரி கமிட்டி என்பதாக ஒன்றை ஏற்படுத்தி மாதம் மூன்றாகியும் நாளதுவரை யாதொரு நடவடிக்கையும் எடுக்காததையறிந்து இம்மாநாடு மிக வருந்துவதுடன் அரசியலார் தக்க நடவடிக்கை எடுத்துத் தீப்பெட்டித் தொழிலுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும் என்று அரசியலாரை வற்புறுத்துகிறது.

3. நாடெங்கும் தலைவிரித்தாடும் உணவுப்பஞ்ச நிலையை உடனடியாகத் தடுத்து ஆவன செய்வதற்கும், உணவு நிலையை அபிவிருத்தி செய்வதற்கும் உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும் சென்னை அரசியலார் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவதுடன், அரசியலார் இப்போது தங்கள் உணவுத் திட்டத்தை சரியான முறையில் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டுமென்றும் எடுத்துக்காட்டுகிறது.

4. சென்னை மாகாணத்தில் சுமார் ஐந்து இலட்சம் எண்ணிக்கையுள்ள கைத்தறி நெசவுத் தொழிலாளரின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, சென்னை மாகாணத்தில் உற்பத்தியாகும் நூலை இம்மாகாணத்திலுள்ள கைத்தறிகளுக்குப் போக மிகுதியை மட்டுமே வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதுடன் கைத்தறி ஜவுளியைத் தடங்கலின்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும்.

5. பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகியவைகளைப் பறிக்கும் வகையில் திராவிட இயக்கப் பத்திரிகைகள், புத்தகங்கள், நாடகங்கள் ஆகியவைகளுக்கு மேலும் தடை விதித்துவரும் சென்னை அரசியலாரின் அடக்கு முறைக் கொடுமையை வன்மையாகக் கண்டிப்பதுடன் அரசியலார் தங்களின் போக்கை இனியாவது மாற்றிக் கொள்ள வேண்டிக் கொள்கிறது.

6. (அ) திராவிட சமுதாயத்தின் உயிர்நாடிப் பிரச்சினையாகிய வகுப்புவாரி சமநீதி உரிமையை எவ்வகையிலும் சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையிலும் நிலை நிறுத்த வேண்டும் என்று விரும்புகிறது.

(ஆ) சுப்ரீம் கோர்ட் மூலமாவது, அரசியல் சட்டத்தைத் திருத்தியாவது வகுப்புவாரி சமநீதி உரிமையை சென்னை அரசியலார் வழங்கவேண்டுமென்று வற்புறுத்துகிறது.

(இ) மேற்கண்ட முறைகளைச் செய்ய சென்னை அரசியலார் தவறுவார்களேயானால் திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு தக்க நடவடிக்கை எடுத்து திராவிட சமுதாயத்தின் உரிமையை நிலை நாட்டவேண்டுமாறு மத்தியக் குழுவினரைக் கேட்டுக்கொள்கிறது.

இத்தீர்மானங்களை முன் மொழிந்தும், வழி மொழிந்தும் மாநாட்டுத் தலைவர் மு. கருணாநிதி, ஆத்தியப்பன், கலிங்கன், இரா. சு. தங்கப்பழம், காஞ்சி—கலியாணசுந்தரம், மதுரை ராஜமான், டி. ஆர். சுப்பிரமணியம், எம். எஸ். சிவசாமி, என். பி. எம். அப்துல் காதர், சி. வி. இராசன், இரா. நெடுஞ்செழியன், பொன்மலை பராங்குசம் ஆகியோர் பேசினர்.

---

## வட ஆற்காடு மாவட்டத் தி. மு. க. செயற்குழு கூட்டம்

வடஆற்காடு மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு தோழர். போளூர் K. சுப்ரமணியம் தலைமையில் வேலூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டத்திலிருந்து சுமார் 24—உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

மத்திய திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வந்திருந்த கழக அமைப்பு விதிகள் வாசிக்கப்பட்டு சில திருத்தங்களுடன் ஒரு முகமாக ஏற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. கழகத்தின் வரவு செலவு 9-10-49 முதல் 20—8—50 தேதி வரை வாசித்து ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆரணி மாநாட்டு வரவு செலவு வாசிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.

டிக்கட் நன்கொடை வசூல் ரூ. 6688-12-0
வெளியூர் தோழர்கள் வரவேண்டிய பாக்கி 451—0—0
மாநாட்டுச்செலவு, பந்தல், சாப்பாடு நாடகம் முதலியவை ரூ 6688—12—0

ஆசைத்தம்பி வழக்கில் ஆட்சியாளர் நடந்து கொண்ட போக்குக்கு வருந்துகிறோம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை நிலைநாட்ட சர்க்கார் தயங்காது காரியமாற்ற வேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

✻

(முன் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. தீர்மானத்தை வெ. சுப்பிரமணியனார் முன்மொழிந்தும் அ. பரசுராமனார் வழி மொழிந்தும் பேசினர்.

### வேலூரில்

20—8—50 மாலை 6 மணிக்கு வேலூர் இலக்குமணசாமி நகர மண்டபத்தில் போளூர் தோழர் கே. சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் கருத்தோவியன், எம். டி. கே. சாமி, மணிஎழிலன், புலவர். கோவிந்தன் பி. ஓ. எல்., வகுப்புநீதிக்கு வந்த ஆபத்தைத் தவிர்க்க, சென்னை அரசாங்கம் எல்லா முயற்சிகளும் எடுக்கவேண்டும் என்று வலியுறுத்திப் பேசினர்.

### சர்வகட்சிக் கூட்டத்தில்

20—8—50 அன்று மாலை 4 மணிக்கு பொள்ளாச்சியில் வகுப்புவாரி முறையை ஆதரித்து ஒரு சைக்கில் ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளில் சென்று ஊர்வலம் வந்தது. பிறகு நடந்த சர்வகட்சிப் பொதுக்கூட்டம் நடந்தது. எல்லா பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். வகுப்புநீதியை ஒழித்திடும் முயற்சியிலீடுபட்டுள்ள வகுப்பு வெறியர்களைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நெல்லிக்குப்பத்தில்

நெல்லிகுப்பம் திராவிட முன்னேற்றக் கழக சார்பில் 20—8—50 அன்று மாலை 6 மணியளவில், திரௌபதையம்மன் கோவிலுக்கெதிரில், ஆசிரியர் வடிவேலு தலைமையில் இராசகோபால் சி இளவழகன், இரெ. இளம்வழுதி எம். எ., ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் வகுப்புநீதியின் அவசியத்தை வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

✻

## கழகச் செய்திகள்

### ஓட்டேரி (சென்னை)

6—8—50ல் நடந்த தி. மு. க. செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மிகவும் அவசியமானது என்றும், அதனை நிலைநாட்டத் தவறினால் சமாளிக்க முடியாத நிலை ஏற்படும் என்று எச்சரித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### திசையன்விளை

6—8—50ல் வன்னியன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ராஜப்பா, எம். எஸ். ராமசாமி பேசினர். இந்தி ஒழிப்புக் களிப்பும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முக்கியத்துவமும் பற்றி விளக்கமாகப் பேசினர்.

### கடம்பூர்

6—8—50ல் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் வே. மு. மாரியப்பாவின் தலைமையில் இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி ஆகியோர் பேசினர்.


## புதிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| மு. கருணாநிதி | | | |
| ஓரே முத்தம் | 1 | 4 | 0 |
| தப்பிவிட்டார்கள் | 0 | 8 | 0 |
| கோவையில் கருணாநிதி | 0 | 8 | 0 |
| கோயில்பட்டி தலைமையுரை | 0 | 2 | 0 |
| செழியன் | | | |
| கல்வி நீரோடை | 0 | 6 | 0 |
| பிருந்தாவனத்தில் | 0 | 12 | 0 |
| அண்ணாதுரை | | | |
| வந்தது விபத்து | 0 | 12 | 0 |
| இராதாமணாளன் | | | |
| அய்யோ கடவுளே! | 0 | 3 | 0 |
| மதம் அவசியமா? | 0 | 3 | 0 |

விற்பனைக் கழிவு 25% தனிப் பிரதி வேண்டுவோர் புத்தக விலைக்குத் தபால் தலைகள் அனுப்பவும்.

**முன்னேற்றப் பண்ணை**

(AD) சென்னை 1.

இராமநாதபுர மாவட்ட

★ தி. மு. கழக முதல் மாநாடு ★

செப்டம்பர் 30, அக்டோபர் 1 சனி—ஞாயிறு

சிவகங்கையில்

இராமச்சந்திரன் பந்தலில் நடைபெறும்

தலைவர்— என். வி. நடராசன்

துவக்குபவர்:— என். எஸ். கனகராசன்

பொதுச் செயலாளரும் கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்து கொள்வர்

கே. ஆர். ராமசாமி, சி. என். ஏ. நடிக்கும்

சந்திரமோகன்

நாடகம் நடைபெறும்.

வரவேற்புக் குழுவினர்.

# சென்னை மக்களே, செயல் வீரராகுங்கள்!

## 9-9-50 திவாகர் வருகிறார்--கருப்புக் கொடி நாள்

நம்மை ஆட்டிப் படைக்கும் வடநாட்டு மத்திய சர்க்கார் மந்திரி — **திவாகர்** — நம் மக்கள் வாழ்வை மதியா வடநாட்டு ஆதிபத்யத்தின் மந்திரி

பட்டினியால் பதைக்கிறோம்—உணரவில்லை இந்திய சர்க்கார்
வகுப்பு நீதி பறி போயிற்று—டெல்லி அரசியலமைப்பால்
துடிக்கிறோம், தவிக்கிறோம், வாழ்வே பறிபோகிறது,

ஆகவே

## காட்ட வாரீர், கருப்புக் கொடி!

நம் அதிருப்தி அனலைக் காட்ட,
வீரப் பரம்பரை என்பதை உணர்த்த,
உரிமை வேட்கையை வெளிப்படுத்த,
'கோவில்பட்டி முடிவை' வெற்றியாக்க,

## திரண்டு வாரீர், தியாகராய நகருக்கு!

9-9-50 மாலை தியாகராய நகரில் இந்தி பிரச்சார சபையில் விழாவாம்! அதற்கு வருகிறாராம்!

—✲—
V

திராவிட நாடு திராவிடருக்கே!—ஆம்! இதை டெல்லி மந்திரி சபை அறியச் செய்வோம்!

எனவே,

## கருப்புக் கொடி காட்டுங்கள்!

1-ம் பக்கத் தொடர்ச்சி

செய்யவேண்டும். விழுதுகள் பலப்பட்டால்தான் ஆலமரத்திற்கு அழகு. இது கழகத் தொண்டர்கள், செயலாளர்கள், அறியாததல்ல. ஆனாலும் ஆர்வத்தின் காரணமாக இந்த வேண்டுகோளை அர்ப்பணிக்கிறேன்.

நாட்டு நிலைமை மிக மிக நெருக்கடியான கட்டத்திலிருக்கிறது. இந்த நேரத்தில் நாடு நம்மை எதிர்பார்த்துக் கிடக்கிறது. மஞ்சள் பெட்டியின் மகத்துவத்தை, மதங்களின் மகான்மியத்தை, மகேஸ்வரனின் சக்தியை மக்களில் பெரும்பாலோர் இப்போது நம்பியிருக்கவில்லை. அவர்கள் எதிர்பார்ப்பது நம்மிடமிருந்துதான். நமது கொள்கை நாட்டவர் கண்ணுக்கு தேளாக இருந்த காலம் போய் தேனாக மாறிவிட்டது இப்போது. இந்த நல்ல நேரத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பயன்படுத்துவது என்றால் போலிப் பிரச்சாரம் செய்து தேர்தலிலே நாற்காலி பிடிப்பது என்பதல்ல பொருள். நம்மிடையே நல்லெண்ணம் அரும்பியிருக்கும் இவ்வேளையில் மக்களுக்குள்ள கஷ்டங்களை, நாட்டுக்குள் படையெடுக்கும் நானாவித ஆபத்துக்களை முறியடிப்பதற்கு நம்முடைய உயிரைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அர்ப்பணிக்க வேண்டும் என்ற அர்த்தத்தில்தான் கூறுகிறேன்.

இந்தி எதிர்ப்பிலே வெற்றி பெற்றுவிட்டோம். வாகை மாலை சூடி விழாக்களும் நடத்திவிட்டோம். எலும்புகளை முறித்துக் கொடுத்து—நரம்புகளை அறுத்துக் கொடுத்து—குருதியைக் கொட்டிக் கொடுத்து இத்தனைக்கும் அசையாத நிலை ஆளவந்தாருக்கு இருக்கிறது என்பது கண்டு, இறுதியாக கோவை முத்தமிழ் மாநாட்டிலே அபாய அறிவிப்பு சங்கம் முழங்கி, அதன் பிறகு ஆளவந்தவர் விழித்துப் பார்த்து, மொழிக்கு வந்த கொடுவாளைத் தடுத்துவிட்டனர். இந்த வெற்றியைக் கொண்டாடும் நேரத்திலேயே நெஞ்சு கொதிக்கும் நெருப்புச் செய்தியொன்று நம்மை நெருங்கிற்று."

வகுப்பு நீதியைச் சாவுக்குழியில் தள்ளிவிட்டு பள்ளு பாடும் வகுப்பு வெறியர்களின் போக்கினைக் கண்டித்தார். தகுதி, திறமை யென்று பேசிடுவோரின் தகுதியற்ற வாதங்களை எடுத்துக் கூறி விளக்கினார். அவர் மேலும் பேசியதாவது:—

"நாம் முன்பு கூறியபோது நையாண்டி பேசியவர்கள் இன்று நம்மோடு சேர்ந்து 'அந்தோ! அநீதி!' என அலறுகிறார்கள். சென்னை அரசாங்கம் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று விட்டது நீதி கேட்க! அதுவும் நம் முயற்சியால்தான், கிளர்ச்சியால்தான் முடிந்தது என்பதை நினைத்துப் பெருமையடைகிறோம். உயர்நீதி மன்றத்துத் தீர்ப்பு கிடைத்ததும் அரசாங்கத்தின் அடுத்த திட்டம் என்ன என்பது அமுங்கித்தான் கிடந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சென்னையில் துவக்கிய கிளர்ச்சி, திராவிட முன்னேற்றக்கழக மாணவர்கள் காட்டிய உணர்ச்சி, மந்திரி மாதவமேனனை வாய் திறக்கச் செய்தது. சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறோம் என்றார்கள். அதன் பிறகு நாம், பொறுத்திருந்து பார்ப்போம்—போகாவிட்டால் கிளர்ச்சி துவக்குவோம்—அதுவும் பொதுவான முறையில் போராட்டம் அமைப்போம் என்று கிளர்ச்சியின் வேகத்தைச் சற்று தளர்த்தினோம். நமது எண்ணமே சர்க்காருக்கு இருக்கும்போது நாம் யாரோடு மோதுவது என்ற நிலையில் சமூக நீதிபற்றிய விளக்கவுரைகளோடு கிளர்ச்சியை நிறுத்தி—சமூக நீதிக்காக போராடுபவர் யாராயிருப்பினும் அவர்கட்கு உதவி செய்வது என்ற அளவோடு இருந்துகொண்டோம். நமது கிளர்ச்சி கருகிவிட்டதாக யாரும் கருதவேண்டாம்.

அப்பீலுக்கு போயிருக்கிறவர்கள் அங்கும் தோல்வி கண்டால்—அதன் பிறகு அரசியல் சட்டம் திருத்தப்படாவிட்டால் அப்போது எரிமலையாகக் குமுறப் போகிறது நமது கிளர்ச்சி. மூன்று கடல்களும் பொங்கி இமயத்தை மூழ்கடிக்கும் கிளர்ச்சி. விந்தியமும் இமயமும் மோதிக்கொள்கிற கிளர்ச்சி. சாவா? வாழ்வா?......என்று முடிவு கட்டுகிற கிளர்ச்சி. அந்தக் கிளர்ச்சியின் முடிவுதான் திராவிடநாடு திராவிடருக்கே என்று என்று தென்னாட்டவரின் ஏகோபித்த குரல் எதிரொலிக்கும் காட்சியாக மாறப்போகிறது.

ஆளவந்தார் சுப்ரீம் கோர்ட்டிலிருந்து திரும்புகிறவரையில் நமக்கு வேறுபல வேலைகளுண்டு. சமூகநீதி பற்றிய விளக்கவுரைகளாற்றி மக்களை விழிக்கச் செய்யவேண்டும். மக்கள் விழிப்படைவார்கள். ஆனால் செயலாற்ற உடலில் வலுவில்லை. காரணந்தான் தெரியுமே — கொடுமையான காரணம்.

பசி...பசி......பருத்திக்கொட்டையை சாப்பிடு என முன்ஷி சிபார்சு செய்யுமளவுக்கு வளர்ந்து விட்ட பசி — திண்டுக்கல் போன்ற

(4-ம் பக்கம் பார்க்க)

### சி. என். ஏ.

பொதுச்செயலாளர் 9—9—50ல்கருப்புக் கொடிநாள் சம்பந்தமாகத் தோழர்களிடம் கலந்துபேச்வதற்காக,சென்னையில் 202, தங்கசாலையில் வந்திருக்கிறார்.

### சென்னைத் தோழர்களுக்கு

—✲—

செப் 9-ந்தேதியன்று வடநாட்டு மத்ய சர்க்கார் மந்திரி திவாகர் வருகிறார். கோவில்பட்டியில் கூடிய கழகச் செயற்குழுவின் தீர்மானப்படி நமது அதிருப்தியைக் காட்டும் வழிவகைகள் குறித்து ஆலோசிக்கவேண்டியிருப்பதால்,மாவட்டக் கழக உறுப்பினர்களனைவரும் செப் 3-ந்தேதியன்று மாலை 6-மணிக்கு தங்கசாலைத்தெரு 202ம்-இல்லத்திற்கு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கே. கோவிந்தசாமி,
செயலாளர்.

Edited Printed & Published by C N. Annadurai M A at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram'

# கருப்புக் கொடி காட்ட வாரீர்

# தீரரே, திரண்டிடுவீர் தியாகராயநகருக்கு!!

## 9–9–50 மாலை கவனமிருக்கட்டும்

## அதிருப்தி 'அனல்' வீசட்டும்!

### அனைவரும் வாரீர், திரண்டு!

திவாகர், 9-9-50ல், சென்னை தியாகராய நகர் வருகிறார். ஏன்? இந்திப் பிரசார சபையிலே, பட்டமளிப்பு விழாவாம்!!

தமிழ் நாட்டிலே, இந்திப் பட்டமளிப்பு விழா!!!

கேளுங்கள் திவாகரை, வடக்கே டில்லியிலோ, அலகாபாத்திலோ, தமிழ் பட்டமளிப்பு விழா, உண்டா என்று!

திவாகர், பதில் கூறமாட்டார்—சிரிப்பார்!!

தமிழ் நாட்டிலேதானே உண்டு வடநாட்டுத் தலைவர்கள் பெயரால், ரோடுகள், பூந்தோட்டங்கள், வளைவுகள்—!

திவாகரைக் கேட்டுப் பாருங்கள்,

காமராஜ் கடை வீதி
சுப்பைய்யா சதுக்கம்
உபயதுல்லா ஊருணி
ஆச்சாரியார் 'அவன்யூ'
கோபால ரெட்டியார் பூங்கா

இப்படி, ஏதாவது உண்டா, என்று. திவாகர், பதில் கூறமாட்டார்,—சிரிப்பார்!

இங்கேதானே உண்டு

நேரு கபே
படேல் பார் சோப்
திலக் பெருங்காயம்

இப்படி, லேபில்கள்—போர்டுகள்.

திவாகரைக் கேட்டுப் பாருங்கள்,

குமரன் கபே
சிதம்பரம் சில்க் அவுஸ்
பக்தவத்சலம் பெருங்காயம்

இப்படி ஏதாவது வடக்கே உண்டா என்று. சிரிப்பார்! பதில் கூறமாட்டார்!

சிரிப்பாய்ச் சிரிக்கிறார்கள் வடக்கே—நமது நிலைமை கண்டு—ஏமாளித்தனத்தைக் கண்டு.

இங்கே மதயானைபோலக் கெம்பீரமாக உலவும் நமது மந்திரிமார்களே, வடக்கே சென்றதும், பூனைபோலாகி விடுகிறார்களே, பாபம்! சிரிப்பாகத்தானே இருக்கும், நம்மைக் கண்டால்!!

கேலிச் சித்திரமாகிவிட்டது, தமிழகம்!

திவாகர்கள், வருகிறார்கள் இந்தி பட்டமளிப்பு விழாவுக்கு!

தீரமிழந்தவர்கள், தன்மானம் இழந்தவர்கள், நமது சுட்டு விரல் காட்டும் வழி ஓடிப் பணி புரிபவர்கள் இந்தத் திராவிடர்கள், என்று திவாகர்கள் தீர்மானித்துவிட்டனர்!

நாம் தீரமும் தன்மானமும் அற்றவர்களா! எடுபிடிகளா! ஏமாளிக் கூட்டமா!

வரலாறு கூறுவது வேறாக அல்லவா இருக்கிறது!

வடநாட்டுக்காரர்கள் கஜினியிடமும் கோரியிடமும், பாபரிடமும் தைமூரிடமும், அலெக்சாண்டரிடமும், அடிமைப்பட்டிருந்தபோதெல்லாம், நாம்

சேர
சோழ
பாண்டியன்

என்ற முடியுடை மூவேந்தர்களின் புகழ், யவணம்வரை சென்று பரவும் நிலையில், தனியரசுடன் தழைத்து வாழ்ந்து வந்தோம், என்று கூறுகிறதே!

நாமா, இன்று திவாகர்கள் கையாண்டி செய்யும் விதமாக நிலை குலைந்து கிடப்பது.

புலியை எலி விரட்டுவதா!

இந்நிலை கண்டு, மனம் எரிமலை ஆகிறது, என்கிறீர்களா! — என்ன செய்வது என்று ஆயாசப்படுகிறீர்களா?

ஆத்திரமும் வேண்டாம்—ஆயாசமும் கூடாது.

உறுதி வேண்டும்—உள்ள உரம் வேண்டும்.

திவாகர்களின் கண் திறக்கும்படி செய்ய, அமைதியான, பலாத்காரமற்ற, வழி இருக்கத்தான் செய்கிறது, அதுதான்.

### கருப்புக் கொடி காட்டுவது!

9-9-50-ல் திவாகர் தியாகராய நகர் வருகிறபோது, திரண்டு வந்து கருப்புக் கொடி காட்டுங்கள். பிறகு கேளுங்கள் திவாகரை!

அடக்கமான பதில் கிடைக்கும்—சிரிப்பல்ல.

திராவிடத்தைத் தெரிந்துகொண்டேன்—என்று கூறுவார் திவாகர்!



நமது நிலைமையை விளக்கும் படம் இது, கண்பர்களே' வடநாட்டுக் கோமுள்வரர்களின் காலடியிலே, மிதியுண்டு கிடக்கிறது, பொன் விளையும் பூமி என்று புலவர்கள் போற்றிப் பாடிய திராவிடம்!

ஆதிக்கக்காரர்கள் கொடி கட்டி வாழ்கிறார்கள் — கொழுத்துக் கிடக்கிறார்கள்.

அரசியல் அதிகாரமும் பொருளாதார பலமும் வடநாட்டிலே குவிந்து கிடக்கிறது. அந்தப் பாரத்தைத் தாங்க வேண்டிய தாழ்நிலை வந்தது, திராவிடத்துக்கு!

சுமை தாங்கி!—இல்லை, இல்லை, அதுமட்டுமல்ல—பனியாவின் பாதம்தாங்கி—இல்லை, இல்லை, அவ்வளவுமட்டுமல்ல, வடநாட்டுப் பொருளாதார ஏகாதிபத்தியத்தின் காலின்கீழ் சிக்குண்டு நசுங்கிக்கிடக்கும் அடிமையாக இருக்கிறது, திராவிடம்.

சரியா, முறையா? இல்லை—என்பீர்கள்! போதுமா?

இந்நிலை மாறி, திராவிடம் தலைநிமிர்ந்து நிற்கவேண்டாமா? என்னவழி அதற்கு? திராவிடம் தன் உரிமைக்காக அறப்போர் தொடுக்கவேண்டும்!

அறப்போர் தொடுப்பதன் அறிகுறிதான் இன்றைய ஆட்சி முறையிலே நமக்குள்ள அதிருப்தியைக்காட்ட,

### கருப்புக் கொடி பிடிப்பது!

தாய்நாட்டிடம் பற்று உள்ளவர் அனைவரும் தவறாது செய்யவேண்டிய பணி,

### கருப்புக் கொடி காட்டுவது

திரண்டு வாரீர், தீரர்களே! திரண்டு வாரீர், தியாகராய நகருக்கு!!


திராவிடநாடு

அரை அணா ] துணை இதழ் [ 3—9—50


என்ன கூறுகிறார்கள் அவர்கள்? — என்று டில்லி தர்பார், அவரைக்கேட்கும் — "நியாயத்தைத்தான் கேட்கிறார்கள் — உரிமையைத்தான் கேட்கிறார்கள் — திராவிட நாடு திராவிடருக்கு இருக்கவேண்டும் என்று கேட்கிறார்கள்" என்று திவாகர் கூறுவார்!

கருப்புக் கொடி, திவாகர்களின் கருத்தை மறைக்கும் நோய் போக்கும் மாமருந்து!!

டில்லிக்குப் போகிறேன்,

உணவுக்கு
உடைக்கு
இரும்புக்கு
சர்க்கரைக்கு
பாதைக்கு
பாலத்துக்கு
மருந்துக்கு

தொட்டது தொண்ணூற்றொன்பதுக்கும், போகிறேன் டில்லிக்கு! டில்லிக்குப் போகிறேன்!! என்று கூறுகிறார்கள் நமது அமைச்சர்கள்,

இந்தக் 'காவடி' தூக்கும் நிலை, 'கனம்' மந்திரிகளுக்குப் பெருமையும், பூரிப்புமா, உண்டாக்கும்!

வெளியே சொன்னால் வெட்கக்கேடு—அடைத்து வைத்தால் துக்கக்கேடு என்று அவர்கள் குமுறிக்கொண்டிருக்கிறார்கள்.

வெள்ளைக்காரன் காலத்திலே இருந்த அளவு அதிகாரம்கூட இப்போது, சென்னை சர்க்காருக்கு இல்லையே!—என்று ஏக்கத்துடன் பேசுகிறார் நிதி மந்திரி கோபால ரெட்டியார்!

உணவு மந்திரியோ டில்லி தருவதாகச் சொன்ன அளவு உணவுப்பொருள் தரவில்லையே—என்ன செய்ய—என்றுகூறி, கண்ணைக்கசக்குகிறார்! கையைப் பிசைந்துகொள்கிறார்!

பாலம் கட்டும் பக்தவத்சலமோ, திட்டம் இருக்கிறது அருமையாக — பணம் இல்லையே—டில்லி சர்க்கார், பணம் தரமுடியாது என்று கூறிவிட்டார்கள் —நான் என்ன செய்ய! — என்று பாதவிக்கிறார்!

மத்திய சர்க்கார், ஏமாளித்தனமானது, கையாலாகாது என்று 'தினசரி' கண்டிக்கிறது.

மத்யசர்க்காரிடம் சென்று வெறுங்கையோடு நமது மந்திரிகள் திரும்பிவருகிறார்கள். என்று, 'விகடன்' — கேலிச்சித்திரம் போட்டுக் காட்டுகிறது.

மத்யசர்க்காரை முதலாளிமார்கள் ஆட்டிப் படைக்கிறார்கள் என்று ஜெயப்பிரகாசர்கள் கூறுகிறார்கள்.

மக்களின் மனதிலே ஒரே குமுறல்!

இதைத் தெரிவிக்க வேண்டியது, ஜனநாயகக் கடமைகளிலே ஒன்று—முக்கியமானது.

ஒரு ஆட்சி முறையிலே மக்கள் அதிருப்தி கொண்டால் அந்த அதிருப்தியைக் காட்டுவதற்கு உள்ள, அமைதியான, பலாத்காரமற்ற முறை,

### கருப்புக்கொடி காட்டுவது!!

ஆகவேதான், அழைக்கிறோம், தோழர்களே! திரண்டு வாரீர் தியாகராயநகருக்கு 9—9—50 மாலை!

டில்லி ஆட்சியின் வீரதீரப்ரதாபத்தை விளம்பரப்படுத்துபவர்.

நாடு இருக்கும்நிலைமையை, மக்கள் மனதிலே மூண்டெழும் அதிருப்தியை அவர் காணவேண்டாமா!

காட்டுங்கள் கருப்புக்கொடி.

(3-ம் பக்கம் பார்க்க)

# சென்னைத் தோழர்கள் போர்ப் பரணி

## கருப்புக் கொடியுடன் களம் புகுவர்!

### 9-ந் தேதிக்கான முன்னேற்பாடு

### தியாகர் நகருக்கு திரண்டு செல்வர்!

திராவிட முன்னேற்றக் கழக மத்திய செயற்குழுத் தீர்மானப்படி 9-9-50 அன்று தியாகராய நகருக்கு வரும் டில்லி மந்திரி திவாகருக்குக் கருப்புக் கொடி பிடித்து, இன்றைய ஆட்சி முறையில் நமக்கு உள்ள அதிருப்தியையும், திராவிட நாடு திராவிடருக்கே என்ற உரிமை உணர்ச்சியையும் எடுத்துக் காட்டுவது என்று 3-9-50 அன்று மாலை கூடிய சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினர் முடிவு செய்தனர். மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டக் கூட்டத்திற்கு டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் தலைமை தாங்கினர்.

பரபரப்போடு கூடியிருந்தனர்! 'என்ன முடிவு செய்வார்கள்?' என்ற ஆர்வம் வெளியிலே கூடிக் கிடந்தோர் முகங்களிலெல்லாம் தென்பட்டது!

"கிளர்ச்சி துவக்கிவிட்டோம் — கிளம்புங்கள் காளைகளே!" என்று அழைப்பதுபோல, கழக வாயிலில் கட்டப்பட்டிருந்த பிரம்மாண்டமான கழகக்கொடி அசைந்தாடிக் கொண்டிருந்தது. சென்னை தங்கசாலைத்தெரு, 202ம் எண்ணிலுள்ள கழகத் தலைமைக் காரியாலயத்தின் வாயிலில், 3—9—50 அன்று மாலை ஏராளமான மக்கள் குழுமிக்கிடந்தனர். மாணவமணிகள், கழகத்தொண்டர்கள், பொதுமக்கள், ஆகியோர் அங்கு குழுமி நின்ற காட்சி, திராவிடத்தின் புத்தெழுச்சியை எதிரொலிப்பது போலிருந்தது.

பொதுச் செயலாளர் அறிக்கையைக் கண்ணுற்றதன் விளைவாக வேக உணர்ச்சியோடு, பிற மாவட்டங்களிலிருந்து தினசரி வந்து கொண்டிருக்கும் கழக முன்னணி வீரர்கள் ஒருபுறம்—கருப்புக் கொடி நாளை வெற்றிகரமாக நடத்த ஆலோசனை நடத்திக் கொண்டிருந்த சென்னை தி. மு. க. வீரர்கள் ஒரு பக்கம் இன்னின்ன வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென யோசனைகள் செய்துகொண்டிருந்த பிரச்சாரவீரர்கள் மற்றொரு பக்கம்! கழகத்தலைமைக் காரியாலயத்தின் உட்புறக்காட்சி, கிளர்ச்சி முரசின் எழுச்சிகீதத்தின் விளைவைப் பிரதிபலித்துக்கொண்டிருந்தது.

9—9—50 நாள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்திய அக்கூட்டத்திற்கு சென்னையின் பலவட்டப் பிரதிநிதிகளும் இருநூற்றுக்குமேல் கூடிக் கிடந்தனர். டாக்டர் தர்மாம்பாள் அம்மையார், தோழர் கோவிந்தசாமியின் கோரிக்கைக்கிணங்க தலைமை தாங்கி கூட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்குகையில், 'கடந்த இந்திஎதிர்ப்பில் தாய்மார்கள் காட்டிய ஆர்வம், தமிழகத்தையே திகைத்திடச் செய்தது. இந்திமீது கழகம் பெற்றவெற்றிக்குத் தாய்மார்களின் சேவை மிகவும் பயன்பட்டது. அன்று, தாய்மார்களிடை எழும்பியபுதுஉணர்ச்சி இன்று வளர்ந்திருக்கிறது. தாய்நாட்டையும், மொழியையும் காக்க எல்லாப் போராட்டங்களிலும் ஈடுபட நாங்கள் தயார்!, என்பதாகக்கூறினர்.

பிறகு பலத்த ஆலோசனைகளுக்குப்பின் கீழ்கண்ட இருதீர்மானங்களும் ஒருமித்த மனத்தோடு நிறைவேறின.

9—9—50-அன்று தியாகராய நகர்வரும் டில்லிமந்திரி திவாகருக்குக் கருப்புக்கொடி பிடித்து, இன்றைய ஆட்சி முறையில் நமக்கு உள்ள அதிருப்தியையும், திராவிட நாடு திராவிடருக்கே என்ற உரிமை உணர்ச்சியையும் எடுத்துக் காட்டுவது என்று சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் கூட்டம், தீர்மானிக்கிறது.

சென்னை திருவல்லிக்கேணியில்

**பொதுக் கூட்டம்**

7-9-50 வியாழன் மாலை 6 மணிக்கு

**"கோவில்பட்டி தீர்மானங்கள்"**

குறித்து

**ஈ. வி. கே. சம்பத், மு. கருணாநிதி,**

**சி. என். அண்ணாதுரை**

ஆகியோர் பேசுவர்.

பன்மொழிப் புலவர்

**கா. அப்பாதுரையார்**

தலைமை தாங்குவார்.

இடம்: சேப்பாக்கம் பெல்ஸ்ரோட் அருகில்.

—டாக்டர் நடேசன் மன்றத்தார்.

2. கருப்புக் கொடி காட்டுவதற்கான நடை முறைத் திட்டங்களை அந்தந்த கிளைக்கழகங்கள் வகுத்துக் கொண்டு, 8—9—50 மாலை 6-மணிக்கு மாவட்டச் செயலாளர் தோழர் கோவிந்தசாமியிடம் அறிவித்து, பொதுத் திட்டம் தீட்டிக் கொள்வது என்று தீர்மானிக்கிறது.

மேற்படி முக்கிய கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில், சிலர் (விபரம் பின்னர்):-

நுங்கம்பாக்கம் எஸ். பாலசுந்திரம்
15-ம் வட்டம், வெ கண்ணன்
சேப்பாக்கம், அப்பா துரையார்
ஏழுகிணறு, எ. எஸ். ராமன்
" முத்து ,
பார்க்டவுன் சி. டி. டி. அரசு
எஸ். வி. ரங்கதுரை
எஸ், எம். மதிவாணன்
கே. கன்னியப்பன்
க வாசுதேவன்
ஆர். கே. சாமி, ஓட்டேரி
அ. க. மணி
வரதன்
அமிர்தநாயகம்,
ஆர். டி. அரசு சூளை ஓட்டேரி
எம். சண்முகம்
ஆர். எம். அருணாசலம்
எ. பெரியசாமி
ஆர். பாண்டியன் வடசென்னை

காசிராஜன்
கு ராமானுஜன்
மோகனரங்கன்
பி. சுப்புசாமி
வேணுகுணன்
என். கே. வீரராகவன்
கே. பக்தவத்சலம், சூளை
நீலநாராயணன்
என். தர்மாம்பாளம்மாள் — பெத்துநாய்க்கன் பேட்டை
ஆலமேலு அப்பாதுரை சேப்பாக்கம்
செ. தேவசகாயம், ஏழுகிணறு
அ. ச. சுந்திரமூர்த்தி, புரசவாக்கம்
சா. ராதாகிருட்டினன்
வா. கு. கோவிந்தசாமி, சூளை
பால்வண்ணர், சூளை

எம். எஸ் கோவிந்தராசன், புளியந்தோப்பு
மா. சம்பந்தம், மாதவரம்
எ. ஆர். சேஷாசலம், அம்மன் கோயில் வட்டம்
எம். ஆர். பாண்டியன், வடசென்னை
பி. வி. முத்துசாமி "
சி. எஸ். பிரகாஸ்-புதுப்பேட்டை (ராயப்பேட்)
ந. ரா. துரைசாமி
ஜெ. முனுசாமி, புதுப்பேட்டை (ராயப்பேட்டை)
கோ. கன்னியப்பன் "
கே. சம்பந்தன்
கோ. சாரங்கபாணி
எம். எஸ். எம். மொய்தீன், கோமலீஸ்வரன் பேட்டை
ஆர். கிருஷ்ணமூர்த்தி,
மா. து. நித்யானந்தம், புளியந்தோப்பு
மா. சு. மணி
ஜி. நாராயணசாமி
வெ. தணிகாசலம்
கா. சிதம்பரம், செம்பியம்
பொன். கு. கோதண்டபாணி, மயிலாப்பூர்
எ. ஜெயராமன்
மு. சு. வை. ராசபாண்டியன், புரசவாக்கம்

**சென்னைத் தோழர்கட்கு**

8-9-50 அன்று மாலை சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக பொது நிர்வாகிகள் கூட்டம் 202, தங்கசாலைத் தெருவில் நடைபெறும்.

சே. கோவிந்தசாமி,
செயலாளர்.

மா. ராஜகோபால், சூளை
அ. சுப்பிரமணியம், சேத்துப்பட்டு
எ. செல்வராசன்,
எஸ். பி. டி. திராவிடமணி, வடசென்னை
பெ. அண்ணாமலை, சைதாப்பேட்டை
வேலப்பன், திருவல்லிக்கேணி
தி. துரைக்கண்ணு, சேப்பாக்கம்
சி. வி. ராஜன், 16-ம் வட்டம்
எம். முத்தையா
சி. கணேசன், பெத்துநாயகன் பேட்டை
டி. எம். பார்த்தசாரதி, வில்லிவாக்கம்
கே. கோவிந்தசாமி, பார்க்டவுன்
ஆர். ரத்தினம், கொத்தவால்சாவடி
காஞ்சி. மணிமொழியார், முத்தியால்பேட்டை
இளஞ்செழியன், கச்சாலீஸ்வரர் வட்டம்
கே. எம். கண்ணபிரான், வடசென்னை
சிவஞானம், ஏழுகிணறு
சி. எஸ். திராவிடமணி, வடசென்னை
சூரியப்பிரகாசம், வடசென்னை
தி. ச. மன்னர்மணி,
சி. என் ஏ

இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. எ. மதியழகன், சேலம் ஏ. சித்தையன் — நாராயணசாமி, அதிராம்பட்டினம் என். எஸ். இளங்கோ, எஸ். வி. லிங்கம், காரைக்குடி கண்ணதாசன், காஞ்சி கலியாணசுந்தரம், இராம. அரங்கண்ணல்.

*

### காட்டுங்கள் கருப்புக் கொடி!

ஆட்சியின் இலட்சணத்தை மக்கள் அறிந்துகொண்டார்கள் என்பதை அறிவியுங்கள்! நாடு, என்ன நினைக்கிறது என்பதை எடுத்துக் காட்ட

**கருப்புக் கொடி காட்டுங்கள்**

அமைதியுடன்—உறுதி தளராமல்!

பலாத்காரமின்றி—பண்பு தவறாமல்!

**காட்டுங்கள் கருப்புக் கொடி**

டில்லி விளம்பர மந்திரி, திவாகர் வருகிறார் தியாகராய நகருக்கு —

**9-9-50-ல்.**

**திரண்டு சென்று காட்டுங்கள் கருப்புக் கொடி!!**

# இன்பத் திராவிடம் துன்பக் கடலாவதா?

## இழிநிலை சகியோம்-ஏமாளிகளல்ல நாம்!

### டில்லி தர்பார் தெளிந்திடச் செய்வோம்!

### திரண்டு வாரீர், தியாகராய நகருக்கு!!

திராவிட மக்களே, மறவாதீர்கள் 9—9—50 அன்று மத்திய சர்க்கார் மந்திரி திவாகர் சென்னை வருகிறார்!

இரயில்வேக்கள் மூலமும் வேறு பலவரிகள் மூலமும் ஆண்டுதோறும் பலகோடி ரூபாய்களை மத்திய சர்க்கார் அடித்துக்கொண்டு போகிறது!

அதிகாரங்கள் அனைத்தும் அவர்களிடம்!

ஆனால் துளியேனும் திராவிடர்பால் அன்பில்லை! மாறாக, வடவரின் வேட்டைக்காடாகத் திராவிடத்தை ஆக்கி வைத்திருக்கிறார்கள்! இந்நிலை மாற, அக்கொடுமைகள் மாள, செயல் புரிவோம்!

இக்கொடுமைகளை உணர்ந்துவிட்டோம், இக்கொடுமைகள் ஒழியுமட்டும் அயரோம் என்பதை அவர்களுக்கு உணர்த்துவோம்!

உணர்த்தும் வகையில் ஆயிரக்கணக்கில் திரண்டெழுவோம்கையில் கருப்புக்கொடி ஏந்தி, "திவாகரே, திரும்பிப்போ!" என்னும் முழக்கத்துடன்!

9—9—50 மாலை தியாகராயநகர் இந்திப் பிரச்சார சபை எதிரே கூடுவோம்!

அமைதியான முறையில், நாகரிகமான வகையில், கருப்புக்கொடி பிடித்து டில்லி மந்திரியை பகிஷ்கரிப்போம்!

நம் உரிமைப் போராட்டத்தின் முதற் படியில் உறுதியுடன் கால் வைத்து,

**கருப்புக் கொடி பிடிப்போம்**

✲

ரேடியோ, மூலம் காங்கிரசின் சர்வாதிகாரம் பலப்படுகிறது!

ரேடியோ, பொதுமக்கள்சொத்து —ஆனால் அது பொதுமக்களின் உரிமையை அழிக்கும் திருப்பணிக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறது!

ரேடியோ, திராவிடத்தில் இந்தி ஆதிக்கத்தைப் புகுத்த பெரு முயற்சி செய்கிறது!

ரேடியோ, வைதிகத்துக்கும் ஜாதி வெறிக்கும் கருவியாக்கப்படுகிறது!

ரேடியோ, திவாகர் இலாகா!

திராவிடத்தை இந்தி ஆதிக்கக்காரர்களிடம் ஜாதி வெறியரிடம், காங்கிரஸ் சர்வாதிகாரத்திடம் அடிமைப்பட, ரேடியோவைப் பயன்படுத்தும்

திவாகரே! திரும்பிப் போ!

என்று முழக்கமிட்டு, 9-9-50-ல் தியாகராய நகரில் திவாகருக்குக்

**கருப்புக் கொடி காட்டுங்கள்!**

✲

டில்லியில், பெரிய பெரிய மன்னர்கள்—பாதுஷாக்கள் தர்பார்நடத்தி இருக்கிறார்கள்!

ஆனால் அவர்கள் யாரும் திராவிடத்தை அடிமை கொண்டது கிடையாது—ஆண்டது இல்லை!

வடநாட்டிலே பலத்துடன் ஆட்சி செய்த,

சந்திரகுப்தன்
சமுத்ரகுப்தன்
ஹர்ஷன்
கனிஷ்கன்
அசோகன்
அக்பர்
அவுரங்கசீப்

போன்ற யாராலும் திராவிடத்தை அடிமைநாடு ஆக்க முடியவில்லை. திராவிடம், தனி அரசுடன் விளங்கிற்று.

இன்று, டில்லி தர்பார், திராவிடத்தையும் ஆள்கிறது. ஏன்? திராவிடர்கள், உரிமை உணர்ச்சியும், தன்மானமும் மங்கிக்கிடப்பதால்.

வரலாறு படிக்கிறீர்களே,தோழர்களே! தாய்நாடு,முன்புதலைநிமிர்ந்து வாழ்ந்துவந்த உண்மை புலப்படவில்லையா!

நமது வாழ்நாளிலே, டில்லி தர்பாருக்கு திராவிடத்தை அடிமையாக்கினோம், என்று பிற்காலச் சந்ததி நமது கல்லறைமீது காரி உமிழுமே!

திராவிடநாடு திராவிடருக்கு — என்ற உரிமை முழக்கத்தை எழுப்பாமலிருந்தால், நம்மை ஏமாளிகள் என்றுதானே உலகம் கருதும்.

திராவிடநாடு திராவிடருக்கே!— என்ற உரிமைக் கிளர்ச்சிக்கு, வடநாடு செவி சாய்க்குமா, கண் திறக்குமா, என்று ஏங்கி என்ன பலன்?

வடநாடு உணரும்படிச் செய்யுங்கள் நமது மன எழுச்சியை.

மனஎழுச்சியைக் காட்டும் வழிதான், டில்லி மந்திரி வருகிறபோது

**கருப்புக் கொடி காட்டுவது!**

✲

டில்லியில் உள்ள மத்தியசர்க்கார் மந்திரிகளிலே ஒருவர் திவாகர்!

இப்படி ஒருவர் இருக்கிறாரா என்று பொதுமக்கள் கேட்கக்கூடும் —ஏனெனில் 'வச வச' வென்று, உள்ள டில்லி மந்திரிகளில், மூன்று நான்கு மந்திரிகளைப்பற்றி மட்டும் தான் பொதுமக்கள் அறிவார்கள். திவாகர்போலப்பலமந்திரிகள்உண்டு டில்லியில்! ஊராருக்குப்போதுமான அளவு அறிமுகமே ஆகாதவர்கள்!

ஊர்பேர் தெரியாதவர்களுக்கெல்லாமா, மந்திரிவேலை தந்திருக்கிறார்கள்? என்று கேட்கிறீர்களா, ஆச்சரியத்துடன்.

என்ன செய்யலாம், தோழர்களே! டில்லிதர்பார் அவ்விதம் இருக்கிறது!

திவாகர், டில்லிமந்திரி! அவரிடம் உள்ள இலாகா, முக்கியமானது— விளம்பர இலாகா!!

ரேடியோவும், சர்க்கார் அறிக்கைகள் தயாரிக்கப்படும் ஸ்தாபனங்களும், திவாகரிடம்!!

அவர்தான், பொதுமக்களுக்கும் சர்க்காருக்கும் தொடர்பு உண்டாக்கும் திருப்பணியைச் செய்பவர்!

உலகுக்கும் இந்திய துணைக் கண்டத்துக்கும் தொடர்பு ஏற்படுத்துவதும் அவர் வேலை!

இவ்வளவு ஜீவநாடியான இலாகா இருக்கிறது திவாகரிடம். எனவே தான், இவர் காணவேண்டும்,

**கருப்புக்கொடிகளை.**

திராவிடத்தின் நிலைமையை அவர் அறிந்துகொள்ளவேண்டும்!

திவாகர், தமது கடமையை அறநெறிப்படிஆற்றுபவரானால்,கருப்புக்கொடிகளைக் கண்டதும், டில்லி தர்பாருக்கு, திராவிடத்தின் விடுதலை வேட்கையை, உரிமை உணர்ச்சியை, உள்ளக்கொதிப்பை எடுத்துரைக்க வேண்டும்.

சர்க்காருக்கு, கண்,காது—அவர்!

அவர் காது கேட்கட்டும், திராவிடரின் உரிமை முழக்கம்.

அவர்கண்,காணட்டும்,எதேச்சாதிகார ஆட்சிமுறையைத் திராவிடர்கள் கண்டிக்கின்றனர் என்பதை விளக்கிடும், கருப்புக்கொடிகளை.

**காட்டுங்கள்
கருப்புக் கொடி!**

திவாகர், விளம்பரமந்திரி, கணமிருக்கட்டும்—அவர் காணும்,

கருப்புக்கொடி ஒவ்வொன்றும், டில்லி தர்பாருக்குத் திராவிடம் அனுப்பிவைக்கும் தூதவன்!

ஆகவேதான் அழைக்கிறோம், ஆர்வமிக்க தோழர்களை வாரீர் திரண்டு, தியாகராயநகருக்கு 9-9-50 மாலை,

**காட்டுங்கள்
கருப்புக் கொடி!**

## வீறுகொண் டெழுவீர்!

திராவிட நாடு தனிப் பெரும் நாடு
தவறு ததன் புகழ் தினம் தினம் பாடு.

தாரணி போற்றிட நாம் முன்னம் வாழ்ந்தோம்
தமிழ்க்கலை தன்னையே அனைவர்க்கும் தந்தோம்.

சேரனும் சோழனும் பாண்டியனும் அன்று
செந்தமிழ்ச்சோலையைக் காத்தனரே நின்று.

வீரமும் செல்வமும் வீழவும் அழியவும்
வெந்துயர் உற்றோம் நீதியோ, கூறீர்!

திராவிட நாடு திராவிடர்க்கே அன்றோ?
திராவிடம் இனியும் தேய்ந்திடல் நன்றோ?

வீறுகொண் டெழுவீர்! வீரச் சோதரரே!
விடுதலை பெறுவோம், புது அரசமைத்தே!

கருப்புக்கோடி கண்டு திவாகர் திகைக்கவேண்டும்திணறிடத்தேவையில்லை—தெளிவு பெறவேண்டும்!

அவர் அறியட்டும் நமக்கொரு நாடுண்டென்று—அங்கு வாழ்வோர் ஒரு இனம் என்று.

மொழியால் நல்வர்—இனத்தால் மனத்தால், பண்பால், பழக்கத்தால், குணத்தால், கோட்பாட்டால் ஒருவர் என்று!

அவர் பெயர் திராவிடர் என்று!

அவர்கள் உழைத்து உழைத்து உடல் கருத்த உத்தமர்கள் என்று!

அவர்கள் இன்று இருட்டறையில் கிடக்கிறார்கள் என்று!

அவர்கள் வாழ்வு இருண்டுவிட்டது என்று.

அவர்கள் ஒளியுள்ளமுகம் இன்று கும்மிருட்டு சூழ்ந்த குகையாகிவிட்டதென்று!

அவர்கள் துக்கத்தால் துவள்கிறார்கள் என்று!

திவாகர் தெரிந்துகொள்ளட்டும்.

அவர் இருக்கும் ஆட்சிக்குழு இருட்டுவழி நடக்கிறதென்றுஇருட்டுப்பாதையில் தடுமாறுகிறதென்று!

அவர்கள் தொட்டது துலங்கவில்லை—தொடாதது எதுவுமில்லை. மஞ்சளும் கருப்பாச்சே என்றுபாடவேண்டிய நிலைதான் என்று!

வடநாட்டு ஏகாதிபத்தியத்திடம் வெள்ளையுள்ளமில்லை— எல்லாம் இருட்டுமயம் என்று.

அவர்கள் அர்த்த இராத்திரியில் ஆட்சி தொடங்கி,இன்றுவரைவாடும் மக்களுக்கு விடிந்தது என்றுசொல்ல முடியவில்லை என்று!

இருட்டு,இருட்டு,எங்கும் இருட்டு என்பதைக் காட்டட்டும் நம்கருப்புக் கோடி.

இருளே, ஓடு, ஒளியே வா என்று கூவியழைக்கட்டும்நம்கருப்புக்கோடி.

கருப்புக்கொடி வெறுப்பின் அறிகுறி-திவாகர் தெரிந்துகொள்ளட்டும்-அவர் விழிவழி சேதிபோய் வாய்வழி வடநாட்டு ஆதிபத்தியம் தென்னாட்டு நிலைபற்றிய தெளிவு பெறட்டும்.

கருப்புக்கொடி காட்டி இருட்டை விரட்டுவோம். ஒளியைத்தேடுவோம்.

✲

1-ம் பக்கத் தொடர்ச்சி

அறியட்டும் டில்லி ஆட்சிபற்றி மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை.

டில்லி சென்று திவாகர் கூறவேண்டும், திராவிடம் சென்றேன்! திகைத்தேன்! மக்கள் திரண்டு வந்தனர்.

கருப்புக் கொடிகளுடன் திராவிடநாடு திராவிடருக்கே! என்ற முழக்கம் கேட்டேன்.

ஆளவந்தாயே, மாள்கிறோமே, பாவியே! — என்று ஆவேசத்துடன் கூறக்கேட்டேன்.

தேனும் பாலும் ஓடும், என்றாயே பஞ்சமும் பட்டினியும் பாம்பாய்க் கடிக்கிறதே — என்று பதைத்துப் பேசக் கேட்டேன்.

விழிப்புற்ற திராவிடத்தை, வீறுகொண்ட திராவிடத்தை, உரிமை வேட்கை கொண்ட திராவிடத்தைக் கண்டேன்!—என்று திவாகர் கூறவேண்டும், டில்லி தர்பாரில்!!

நீங்கள் பிறந்த நாட்டுக்காக இந்தப் பணியாற்றக்கூடாதா!

திரண்டு வாரீர், தியாகராயநகர் நோக்கி—

**காட்டுவோம்
கருப்புக்கொடி!**

# கண்ணீர் சிந்தும் காட்சி! ★

பயங்கரமானது, பணகுண்டு! அணுகுண்டுகளைவிடவா? என்று கேட்கிறீர்களா — ஆமாம், தோழர்களே!—அணுகுண்டைவிட ஆபத்தானது பணகுண்டு — ஏனெனில் அணுகுண்டு தயாரிக்கக்கூட, பணகுண்டுதானே தேவைப்படுகிறது!!

இந்தப் பணகுண்டும் கையுமாக நிற்கும் பெரிய உருவம் — மனித உருவந்தான்—பாரீர்!

அந்த உருவத்தின் காலின் அருகே உள்ள சிறியஉருவம்காணீர்!

பெரிய உருவம், வடநாடு—சிறிய உருவம் திராவிடம்!!

வடநாட்டிடம் பணகுண்டு!!

திராவிடத்திடம்?... ..!

வேடிக்கைக்காகத் தீட்டப்பட்ட படம் அல்ல! கருத்துடன், காரணத்துடன், கணக்குமுறை தவறாமல் தீட்டப்பட்டுள்ள படம் இது.

மீண்டும் ஒருமுறை பாருங்கள்—சிறிய உருவத்தைப்போலப் பலமடங்கு ஓங்கி வளர்ந்து நிற்கிறதல்லவா,பெரிய உருவம். இது, வடநாட்டுக்கும் திராவிடத்துக்கும், பொருளாதாரத்துறையிலே உள்ள பேதத்தைவிளக்கும் படம் —பாடம் தரும் படம்!!

பம்பாயில் உற்பத்தியாகும்ஜவுளியின் அளவுக்கும், சென்னை மாகாணம், கொச்சி, திருவாங்கூர் ஆகிய இடங்களிலே உற்பத்தியாகும் மொத்த ஜவுளியின் அளவுக்கும், ஒப்பிட்டுப்பார்க்கும்போது, தீட்டப்பட்டது இந்தப் படம்!!

ஆடை ஒன்றிலே மட்டுந்தான், வடநாடு இப்படி ஓங்கி வளர்கிறது, திராவிடம் சிறுமை அடைந்திருக்கிறது என்று எண்ணுதீர்கள்—எல்லாத்தொழில்களிலும் இதேநிலை — இதைவிட மோசமான நிலை!

வடநாடு, சீமை! திராவிடம், பட்டிக்காடு!!

வடநாடு, முதலாளிமார்களின் முகாம்!

திராவிடம், பாட்டாளியின்பட்டி! சரியா, இந்த நிலைமை?

எங்கள் தந்தையர் நாடென்றபேச்சினிலே ஒருசக்தி பிறக்குது மூச்சினிலே!—என்று பாடினர், பாரதியார்.

படத்தைப் பாருங்கள் மற்றோர் முறை, பாட்டைக் கவனத்துக்குக் கொண்டுவாருங்கள் — மூச்சினிலே சக்தியா பிறக்குது — நெஞ்சில் கை வைத்து, நேர்மையில் நாட்டம்வைத்துக் கூறுங்கள்!

கண்ணீர் பெருகிடச் செய்யும் காட்சி!

பணகுண்டுடன் உள்ள பலசாலி.

அவன் பாதத்தருகேசிறுஉருவம்!

திராவிடமே! உன்நிலையை மாற்றும் ஆற்றல்கொண்ட அறப்போர் வீரர்கள், இல்லையா! — உண்டு — என்கிறீர்களா?—வாய்ச்சொல்வீரர்களாக இருந்துவிடாதீர்கள்—வாரீர் திரண்டு, தியாகராயநகருக்கு, திராவிடத்தின் புது வாழ்வுக்கான அறப்போர் முரசம் ஒலித்துவிட்டது. அதன் துவக்க ஒலிதான் இது. எனவே, தூங்கிக்கிடக்க இதுவல்ல நேரம்.

ஆகவே,



## காட்டுங்கள் கருப்புக்கொடி!

# ★ அன்பழைப்பு ★

திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு, கோயில்பட்டியில் நிறைவேற்றிய தீர்மானங்களிலே முக்கியமானது, வடநாட்டு மந்திரிகள் இங்கு வருகிறபோது, திராவிடத்தின் அதிருப்தியைத் தெரிவிக்க, கருப்புக்கொடி காட்டுவது என்பது.

மக்கள் மனதிலே ஒருஆட்சி முறையிடமோ, ஆட்சியாளர்களின்போக்கினிடமோ ஏற்பட்டுள்ள வெறுப்புணர்ச்சி, கட்டுக்கு அடங்கி, சட்டத்துக்குக் கட்டுப்பட்டு, இருக்கவேண்டும்—நாடு, இரத்தக் களறியாகாது இருக்க வேண்டுமானால்.

ஒரு ஆட்சி முறையினால் அல்லல் தொடர்ந்து ஏற்பட்டு, மக்களின் வாழ்வு தாக்கப்பட்டுப் போகுமானால், மக்கள் மனதிலே குமுறலும், வெறுப்புணர்ச்சியும் ஏற்படாமலிருக்கமுடியாது.

மக்கள் மாக்கட்டைகளல்ல—மானபிமான உணர்ச்சியால் உந்தப்பட்டு, உரிமை வேட்கை கொண்டுள்ளவர்கள். எனவே, தந்திரமான பிரச்சாரத்தாலோ, தர்பார் போக்கினாலோ, மக்களின் கண்களை மூடிவிட முடியாது. மக்கள் மனதிலே கொதிப்பும் கொந்தளிப்பும் ஏற்பட்டுத்தான் தீரும்.

இந்தக் கொதிப்பு, பலாத்காரமாக உருவெடுத்தால் நல்லது, என்று தான் தன்னலத் தந்திரக்காரர்களான ஆட்சியாளர்கள் எண்ணுவார்கள். ஏனெனில், எவ்வளவு நியாயமான கோரிக்கையானாலும், உலகமே ஒப்புக்கொள்ளக்கூடிய உன்னதமான நோக்கத்தைக் கொண்ட உரிமைக் கிளர்ச்சியானாலும், பலாத்காரம் கொண்டதாக அக்கிளர்ச்சி உருவெடுக்குமானால், அதையே காரணமாகக் காட்டி, அடக்குமுறையை அவிழ்த்துவிட்டு வேட்டையாடி, கிளர்ச்சியை ஒழித்துக் கட்டிவிட, ஆட்சியாளர்களுக்கு வழி கிடைத்துவிடும்.

இதைக் கருதியே, வஞ்சக எண்ணம் கொண்ட எதேச்சாதிகாரிகள் சிலர், நியாயமும் நேர்மையும் கொண்ட இயக்கத்தை, பலாத்காரத் துறைக்குத் துரத்திவிடத் தமது கையாட்களையே அமர்த்துவதும் உண்டு.

பலாத்காரம் கூடாது—ஆனால், மனதிலே குமுறும் எண்ண அலைகள், என்ன ஆவது?

மக்களாட்சியின் மாண்பும், அறிவுடைமையின் மாண்பும், இந்த 'அலைகளை' அமைதியான, பலாத்காரமற்ற வழியிலே செலுத்துவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

மக்களின் மன நிலையை, உணர்த்த,—அதேபோது பலாத்காரத்திலே குதித்துவிடாதபடி பாதுகாக்க—உள்ள வழி, அவ்வப்போது, மக்கள் தமது அதிருப்தியை ஆட்சியாளர்கள் அறியும்படிச் செய்யும் நோக்கத்துடன், கருப்புத் கொடி காட்டுவது!

இது நாகரீக உலகிலே, ஜனநாயக உரிமைகளில் ஒன்றாக மதிக்கப்படுவதாகும்.

ஆட்சி முறை சரியில்லை—என்று அறிவுறுத்துவது கருப்புக்கொடி!

வாயில்லாப் பூச்சி மக்கள், அவர்களை மயக்கவும் மிரட்டவும் நமக்கு வசதியும் சக்தியும் நிரம்ப இருக்கிறது. எனவே, எப்படிவேண்டுமானாலும் இறுமாந்து கிடக்கலாம்—என்று எண்ணுதீர், ஆளவந்தார்களே! உமது ஆட்சி முறையை நாங்கள் வெறுக்கிறோம், கண்டிக்கிறோம், என்பதை எடுத்துக் காட்டி, எதேச்சாதிகாரத்துக்கு எச்சரிக்கை செய்வது கருப்புக்கொடி! உரிமை பெற, விடுதலை பெற, நடத்தப்படும் அறப்போரின் தொடக்கத்தைக் காட்டுவது கருப்புக் கொடி!

எனவேதான், கோயில்பட்டியிலே, இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டுக்கு வந்திருந்த திரளான திராவிடர்கள் இதனை வரவேற்றனர்.

எப்போது இதற்கான செயல் திட்டம்—? என்று கேட்டனர், ஆர்வத்துடன், ஆவலுடன்.

நாம் எதிர்பார்த்ததைவிட விரைவாகக் கிடைக்கிறது, வாய்ப்பு!

திவாகர் வருகிறார்—தியாகராய நகருக்கு!

தாலமுத்துவையும் நடராஜனையும் பலிகொண்ட இந்திக்கு, பட்டமளிப்பு விழா! அதற்கு வருகிறார் டில்லி மந்திரி. கோயில்பட்டியில் நாம் கூடித் தீர்மானித்தோம்—அவர் வருகிறார்!

என்ன செய்யப் போகிறீர்கள், எங்கே செயல் திட்டம் என்று எக்காளமிட்ட தோழர்களே!

ஆண்டு பலவாகின்றன திராவிட நாடு திராவிடருக்கே என்ற உரிமைத் திட்டத்தை நாம் வகுத்து! பேசினோம் பேசினோம்—சலிக்கச் சலிக்க! வடநாடு, கேளாக் காது கொண்டதாக நடிக்கிறது! நேருக்களோ, செரித்த புருவத்துடன் வேறு திக்கு நோக்கி நிற்கின்றனர்! அவர்களின் 'பார்வை' இப்பக்கம் திரும்ப மறுக்கிறது! ஏன்? நாம், வாய்ச் சொல் வீரர், என்பது அவர்களின் எண்ணம்.

பொய்! பொய்! நாம் நமது இலட்சியத்துக்காக எத்தகைய கஷ்ட நஷ்டம் ஏற்கவும் தயார்! — என்று கூறுவீர்கள் — ஒப்புக்கொள்கிறேன் உவகையோடு—ஆனால், பேச்சு போதாதே—வருகிறாரே வடநாட்டு மந்திரி, சென்னைக்கு, 9-9-50-ல். அவருக்குக் கோயில்பட்டித் தீர்மானப்படி கருப்புக் கொடி காட்டினால்தானே, நாம் திட்டப்படி நடப்பவர்கள் என்று பொருள்படும்.

நமது உறுதிக்கும் உள்ளத் தூய்மைக்கும், வீரத்துக்கும் ஒரு சோதனை—9-9-50!

இதிலே பெறும் வெற்றி, மேலும் பல வெற்றிகளுக்கு வித்தாக அமையப்போகிறது. வீரத் திராவிடத் தோழர்களே! விரைந்து வாருங்கள், காரியமாற்ற, கடமையைப் புரிய, கருப்புக் கொடிகளுடன்!

**அண்ணதுரை.**

Edited Printed & Published by C. N. Annadurai M A at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram'